உ

திருச்சிற்றம்பலம்

ஓம் குமரகுருதாச குருப்யோ நம:

# பாம்பன் சுவாமிகள் போற்றும் முருகப் பெருமானின் ஆறுபடைவீடுகள்



பழநி



சுவாமிமலை



திருச்செந்தூர்



திருத்தணி



பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள்



திருப்பரங்குன்றம்



பழமுதிர்ச்சோலை

ஆசிரியர்:

சித்தாந்த சரபம், சைவ சித்தாந்த கலாநிதி

முனைவர் **கோமதி சூரியமூர்த்தி** எம்.ஏ., பி.எச்.டி.

உ

திருச்சிற்றம்பலம்

ஓம் குமரகுரு தாச குருப்யோ நம

# பாம்பன் சுவாமிகள் போற்றும் முருகப்பெருமானின் ஆறுபடை வீடுகள்




ஆசிரியர்

சித்தாந்த சரபம், சிவஞான வாரிதி

**முனைவர் கோமதி சூரியமூர்த்தி,** எம்.ஏ., பிஎச்.டி.

மேனாள் பேராசிரியர், சைவசித்தாந்தத்துறை

மதுரை காமராஜ் பல்கலைக்கழகம்



மஹாதேஜோ மண்டல சபை (15/48) அனுமதியுடன்

நூல் வெளியிடுவோர்

**கீதா இராஜமகேந்திரன்,** B.Com., M.B.A

Indian Oil Star Gas Distributor, Chennai

**கல்பனா மஹாதேவன்,** B.E.

**மஹாதேவன் சதாநந்தன்,** B.E., M.S. (USA)

**விஷ்ணுபிரியா கார்த்திகேயன்,** M.C.A.

**கார்த்திகேயன் சதாநந்தன்,** B.E., Q.L.A. S.Q.S.(UK)

Information Technology Specialists, U.S.A

உ

ஓம் குமரகுருதாச குருப்யோ நம:

# பணிந்துரை

**"நீர்வளம் ஆர் பரங்குன்றிலும், நீடு எழில் நிமிர் திருச்செந்திலிலும்,
சீர்வளம் ஆர் திருவேரகம் தன்னிலும், தீதறு பழநியிலும்,
ஏர்வளம் ஆர் திருச்சோலை அம்கிரியிலும் இருந்து அடி நினைவார்க்குப்
பார் வளம் மேல் வளம் நல்கு அருள் குகனுக்குப் பல்லாண்டு கூறுதுமே"**

(பாம்பன் – சுவாமிகள் – திருக்கந்தர் திருப்பல்லாண்டு)

தண்ணார் தமிழ் அளிக்கும் தென்பாண்டி நாட்டிலுள்ள இராமேசுவரத்தில் 19ஆம் நூற்றாண்டில் அவதரித்து சிவயோகப் பெருவாழ்வு (1850 - 1929) வாழ்ந்த அருளாளர் அத்தியாச்சிரம சுத்தாத்வைத வைதிக சைவ சித்தாந்த ஞானபானு பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் ஆவார் முருகப் பெருமானின் அருட்காட்சியும் அவரின் உபதேசமும் பெற்றவர் சுவாமிகள். முருகப் பெருமான் ஒருவரையே பரம்பொருளாக கருதி வழிபட்டவர். சிறுவயதிலேயே கவிபாடும் ஆற்றல் பெற்றவர்.

**ஐம்முகச் சிவனும், அறுமுகச் சிவனும் ஒன்றே** என்ற கொள்கை யுடையவர் திருவளர் சதாசிவவடிவமாக விளங்கும் சிவலிங்க வடிவத்தைக் காணும் போது, "இது நாம் வணங்கும் முருகப்பெருமானின் வடிவமே என்று கருதி அந்த வடிவத்தில் ஐந்து முகங்களுடன் (ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோ ஜாதம்) அதோமுகம் எனப்படும் ஆறாவது முகமும் வெளிப்பட்டிருப்பதாக நன்கு பாவனை செய்து, அந்த வடிவத்தை என் இதய ஆசனத்தின் நடுவிலும் எழுந்தருளச் செய்து இரண்டும் ஒன்றே என ஏகமாக என் மனம் பாவிக்கும்" என்று சுவாமிகள் திருவிராமேச்சுரம் பதிகத்தின் முதற்செய்யுளில் சுவாமிகள் கூறியுள்ளார்கள். முருகப்பெருமானின் அருளால் 6666 அருட் பாடல்களைப் பாடி அவற்றை ஆறு மண்டலங்களாகத் தொகுத்துள்ளார்.

அடியேனின் பெற்றோர் பாம்பன் சுவாமிகளிடமும், திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளிடமும் மிகுந்த பக்தி உடையவர்கள். திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளை எங்கள் இல்லத்திற்கு அழைத்து, பாதபூசை செய்து, உபசரித்து அவருடைய சொற்பொழிவுகள் நிகழ ஏற்பாடு செய்தவர். திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் தான்

அடியேனுக்குச் சதாநந்தன் என்ற பெயர் சூட்டியவர். சிறுவயதிலிருந்தே பெற்றோர்களின் பக்தியையும், வழிபாடுகளையும், சமயத் தொண்டுகளையும் பார்த்து வளர்ந்த எனக்கும் முருகப் பெருமான் மீது பக்தி உண்டாயிற்று. திருப்புகழ், திருமுறைகள், பாம்பன் சுவாமிகள் பாடல்கள் பாராயணம் செய்யும் பயிற்சியும் பெற்றேன்.

மண்ணினில் பிறந்தார் பெறும் பயன் இரண்டு. ஒன்று மதிசூடும் அண்ணலார் அடியவர்க்கு அமுதளித்தல். மற்றொன்று பிறைசூடிய பெம்மானுக்கு நடைபெறும் திருவிழாக்களைக் கண்டு களித்தல் என்று திருஞான சம்பந்தரின் கூற்றாக சேக்கிழார் பெரிய புராணத்தில் கூறுகின்றார். அடியேனின் கொள்ளுப்பாட்டனார் காலத்திலிருந்தே மயிலம் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலின் பங்குனி உத்திர விழாவில் அடியவர்கட்கு ஆறுநாட்கள் அன்னம்பாலிப்பும் செய்து வந்தனர். அவரைத் தொடர்ந்து அடியேனின் பாட்டனார், பெற்றோர் அத்திருக்கோயில் பங்குனி உத்திர விழாவில் அடியார்கட்கு அன்னம் பாலிக்கும் பேறு பெற்றவர்கள். அடியேன் பெற்றோர் **நடராசன்-கனகாம்புஜம்** பெயரில் அறக்கட்டளை அமைத்து அதன் சார்பாக கடந்த 43 ஆண்டுகளாக சென்னை திருவான்மியூரிலுள்ள பாம்பன் சுவாமிகள் சமாதி நிலையத்தில் பங்குனி உத்திர விழாவை நடத்தி, பாம்பன் சுவாமிகளின் நூல்களைப் பதிப்பித்து, மகாதேஜோ மண்டல சபை அனுமதியுடன் வழங்கிவர குருவருளும், திருவருளும் கூட்டிவருகின்றது. இதுவரை வெளிவந்துள்ள நூல்கள் 27 ஆகும்.

இவ்வாண்டு சுவாமிகளின் குருபூஜை அன்று (16.5.2017) (மேனாள் பேராசிரியர், சைவ சித்தாந்தத் துறை, மதுரை காமராஜர், பல்கலைக்கழகம்) **முனைவர் கோமதி சூரியமூர்த்தி** அவர்கள் எழுதியுள்ள "**பாம்பன் சுவாமிகள் போற்றும் முருகப்பெருமானின் ஆறுபடை வீடுகள்**" என்ற நூலை மயிலம் பொம்மபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சிவஞானபாலய சுவாமிகள் 20வது பட்டம் **அருள்திரு குருமகா சந்நிதானம்** அவர்கள் வெளியிட்டு, ஆசியுரை வழங்கத் திருவருள் கூட்டி வைத்துள்ளது. பெரும்பாலும் ஆறுபடை வீடுகளின் பதிகக் கருத்துக்கள் பொதுவாக இருவகைப்படுகின்றன. ஒன்று சுவாமிகள் முருகப் பெருமானைப் போற்றுதல் மற்றொன்று சுவாமிகள் முருகப் பெருமானிடம் செய்யும் வேண்டுகோள்கள். "**யாம் இரப்பது பொன்னும், பொருளும், போகமும் அல்ல. உன் அருளே**" என்று சுவாமிகள் முருகப்பெருமானிடம் அவரது அருளையே வேண்டுகின்றார்.

அப்பர் பெருமான் தன் உடல் உறுப்புக்கள் அனைத்தும் இறை வழிபாட்டிற்கே பயன்பட வேண்டும் என்று திரு அங்க மாலை பாடியது போன்று சுவாமிகள் இரண்டாம் மண்டலம், திருவலங்கல் திரட்டு, முதற்கண்டம் திருச்சோலை மலைப் பதிகத்தில் தம் உடல் உறுப்புக்கள் முருகப் பெருமானை வழிபட மாதவம் செய்திருக்க வேண்டும் என கூறுகின்றார். திருத்தணிகை மலைப் பதிகத்தில் முதுமையால் வருந்தும் முன்பே இளமையிலேயே முருகப் பெருமானின் திருவடிகளை வணங்க வேண்டும் என அறிவுறுத்துகின்றார்.

எங்கள் வேண்டுகோளை ஏற்று மூன்றே நாட்களில் இந்த அருமையான நூலை எழுதிய சித்தாந்த சரபம், சைவ சித்தாந்த கலாநிதி **முனைவர் கோமதி சூரியமூர்த்தி அம்மையார்** அவர்களுக்கு எங்கள் பெற்றோர் நடராசன்–கனகாம்புஜம் அறக்கட்டளை சார்பாகவும், மஹாதேஜோ மண்டல சபையின் சார்பிலும் அடியேன் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். அம்மையாரின் சிவப்பணி சிறந்து விளங்க தமது நல்லாதரவை நல்கும் அம்மையாரின் ஒப்பற்ற கணவர் மதுரை காமராசர் பல்கலைக்கழக மேனாள் பேராசிரியர், திருவாசகச் சுடர் சித்தாந்த தொண்டர் மாமணி **முனைவர் செ.ஈ. சூரியமூர்த்தி,** M.Sc., M.S., Ph.D., (USA) அவர்களுக்கு நன்றி. இந்நூலை அழகாக அச்சிட்டு உதவிய சென்னை எஸ்.எஸ். கிராபிக்ஸ் உரிமையாளர் **திரு. எஸ். அரங்கநாதன்** அவர்களுக்கு நன்றி. 1926 ஆம் ஆண்டில் பாம்பன் சுவாமிகளால் தோற்றுவிக்கப்பட்ட மஹாதேஜோ மண்டல சபையை நன்றியுணர்வோடு போற்றுகின்றோம்.

இங்ஙனம்
நடராசன் – கனகாம்புஜம் அறக்கட்டளை சார்பாக
பாம்பனார் – வாரியார் அடிப்பொடி
சித்தாந்த ரத்தினம் **செ.வே. சதாநந்தன்**
Chief Refinery Coordinator (Retd.) Indian Oil
தலைவர், மஹாதேஜோ மண்டல சபை (தோற்றம் 1926)

<u>அறக்கட்டளையின் மற்ற உறுப்பினர்கள்</u>

**பொ.ந. நமசிவாயம்**
G.M. (Retd.,) Madras Fertilizer & M.D., A.B.N. Logistics

**வி.ச. சிவக்குமார்**
Manager (Retd.) Southern Industries

**கீதா இராசமஹேந்திரன்**
Indian Oil Gas Star Distributor

**ந.லோ.செந்தில்நாதன்**
Vice President, Standard Chartered Bank

உ

ஓம் குமரகுருதாச குருப்யோ நம:

# முன்னுரை

**சைவ சித்தாந்த கலாநிதி, சித்தாந்தச் செம்மணி**
**சித்தாந்த சரபம், சிவஞான வாரிதி**
**முனைவர் கோமதி சூரியமூர்த்தி**

**"சிந்தை மயங்காமல் எனைச் சித்தாந்த வீட்டிடை வை**
**கந்தமணி தெய்வமகள் காட்டார் மகள் கொழுநா**
**சந்தமுனி நெஞ்சத் தடங்கமலமே அமுதால்**
**மந்தி மிகு கொள்ளு மயிலைமலை வாழ் குகனே "**

(பாம்பன் சுவாமிகள்)

அண்மைக் காலத்தில் வாழ்ந்து பல்லோராலும் வணங்கப்படும் பெருமையுடையவராய் இன்றும் புகழுடம்புடன் நம்மிடையே வாழ்பவர் பாம்பன் சுவாமிகள் என்று அழைக்கப்படும் அத்தியாச்சிரம சுத்தாத்வித வைதீக சைவசித்தாந்த ஞானபானு ஸ்ரீமத் குமாரகுருதாச சுவாமிகள் ஆவார். இவருடைய பிள்ளைத் திருநாமம் அப்பாவு. பாம்பன் நகரில் வாழ்ந்தமையால் பாம்பன் சுவாமிகள் என அழைக்கப்பட்டார். குமரகுருவாகிய முருகப் பெருமானையே வழிபடு கடவுளாகக் கொண்டு ஆட்பட்ட சுவாமிகட்கு, பாம்பன் தந்தி அலுவலகத்தில் உத்தியோகம் பார்த்த சேஷகிரிராயர் என்பவர் சூட்டிய சிறப்புப் பெயர் "**குமரகுருதாசர்**" என்பதாகும். சுவாமிகள் முருகப் பெருமானிடம் உபதேசம் பெற்றவர். முருகப் பெருமானின் அருளால் உவமையிலாக் கலைஞானமும் உணர்வரிய மெய்ஞ்ஞானமும் பெற்றவர், சுவாமிகள் முருகப்பெருமானின் அருளால் 6666 அருட்பாடல்களை அருளி அவற்றை ஆறு மண்டலங்களாகத் தொகுத்தவர்.

பாம்பன் சுவாமிகளின் நூல்கள் பற்றி எதுவும் அறியாதிருந்த அடியேனை அவற்றைப்படிக்கும் படி ஆற்றுப்படுத்தி, சுவாமிகளின் நூல்கள் பலவற்றை அன்பளிப்பாகத் தந்தவர் சென்னை மஹாதேஜோ மண்டலசபைத் தலைவரான பாம்பன் – வாரியார் அடிப்பொடி சித்தாந்த இரத்தினம் **திரு. செ.வே. சதாநந்தன்** ஐயா ஆவார். அவர்க்கு அடியேன் எற்றைக்கும் நன்றியுடையேன்.

குருவருளாலும், திருவருளாலும் அடியேன் பாம்பன் சுவாமிகள் தொடர்பாக எழுதிய நூல்கள் **பாம்பன் சுவாமிகள் உணர்த்தும் மனிதமேம்பாட்டுச் சிந்தனைகள், பாம்பன் சுவாமிகளின் பெருமை, பாம்பன் சுவாமிகள் உணர்த்தும் சைவசித்தாந்தக் கோட்பாடுகள், பாம்பன் சுவாமிகளின் பாடல்களில் சமயச்சாரியார் நால்வரின் வரலாற்றுக் குறிப்புகளும் பாடல் சிந்தனைகளும், செக்கர்வேள் செம்மாப்பு முதற்காண்டம் வினா விடை, பரிபூரணானந்த போதம் வினாவிடை, தகரலாயரகசியம் வினாவிடை, குமரவேள் பதிற்றுப்பத்தநதாதி வினாவிடை, பாம்பன் சுவாமிகள் பாடல்களில் திருமந்திரச் சிந்தனைகள் என ஒன்பதாகும்.**

சென்ற மாதம் திரு. செ. வே. சதாநந்தன் ஐயா அவர்கள், "அம்மா! சுவாமிகள் பற்றி ஒரு சிறு நூல் எழுதி மே ஒன்றாம் தேதிக்குள் கொடுத்தால் சுவாமிகளின் குருபூசையன்று வெளியிடலாம்" என்று தொலைபேசி மூலம் என் கணவரிடம் தெரிவித்தார்கள் "**பாம்பன் சுவாமிகள் போற்றும் முருகப்பெருமானின் ஆறுபடைவீடுகள்**" என்று ஐயா தலைப்பும் தெரிவித்தார்கள் கடந்த ஓராண்டாக உடல்நலக்குறைவால் அவதிப்படும் அடியேன் நூல் எழுதத் தயங்கினேன், அப்போது என் கணவர் அடியேனை ஊக்குவித்து நூல் எழுத தொடங்குமாறு கூறினார்.

ஐயா கொடுத்த தலைப்பு அடியேனுக்கு மிகவும் பிடித்திருந்தது. ஐயா குறிப்பிட்ட காலத்திற்குள் இந்நூலை எழுதி முடித்ததில் என் செயல் எதுவும் இல்லை. எல்லாம் இறைவன் செயல். இந்நூலை எழுதி முடிக்கத் துணை நின்ற குருவருளுக்கும், திருவருளுக்கும் முதற்கண் அடியேனின் வணக்கத்தையும் நன்றியையும் சமர்ப்பிக்கின்றேன்.

முதல் மண்டலத்தில் சுவாமிகள் தாம் பாடிய முதல் பதிகமான அமரர்கோவை அடுத்து ஆறுபடைவீடுகள் வரிசையில் திருப்பரங்கிரி (பதிக எண்,2 ), திருச்செந்தில் ( பதிக எண்,3 ), திருபழநிமலை (பதிக எண்,4) திருவேரகம் ( பதிக எண்,5 ), திருக்குன்று தோறாடல் (பதிக எண்,6 ), திருச்சோலைமலை ( பதிக எண்,7 ), திருத்தணிகை ( பதிக எண்,12 ) பதிகங்கள் பாடியுள்ளார்கள்.

இரண்டாம் மண்டலம், திருவலங்கல் திரட்டு, முதற்கண்டத்தில் சுவாமிகள் பாடியுள்ள ஆறுபடைவீடுகள் திருப்பரங்கிரி (பதிக எண், 85), திருச்சீரலை வாய் (பதிக எண்,9), திருச்சிந்துபுரம் (பதிக எண்,25) திருப்பழநி (பதிக எண் 13,14 ), திருவாவினன்குடி (பதிக எண்,15 ), திருவேரகம் ( பதிக எண்,10 ),

திருச்சோலைமலை (பதிக எண்,12), திருத்தணிகை மலை (பதிக எண்,12), திருத்தணிகைமலை ( பதிக எண்,51 ) முதலியன. திருச்செந்தில், திருச்சீரலைவாய், திருச்சிந்துபுரம் என்ற மூன்றுமே திருச்செந்தூரைக் குறிப்பன. திருவாவினன்குடி அடிவாரத்தில் உள்ள தலம், திருப்பழனி மலைமேல் உள்ளது.

ஆறாம் மண்டலம், ஸ்ரீமத் குமார சுவாமியம், 1. திருவிளையாடற் காண்டத்தில் 12 ஆவது திருப்பரங்கிரித்திருவிளையாடல் ( 3 பத்துகள் ), 11ஆவது திருச்சீரலைவாய்த் திருவிளையாடல், 19 ஆவது திருப்பழநிமலைத் திருவிளையாடல் (8 பத்துகள்).

இரண்டாம் மண்டலம், திருவலங்கல் திரட்டு, முதற்கண்டம்,12. திருச்சோலைமலைப் பதிகப் பாடல்களில் சுவாமிகள் தம் உடல் உறுப்புகள் தலை, செவி, விழி, மூக்கு, நா, கரம், கால், உடம்பு, மனம், நெஞ்சு முதலியன முருகப் பெருமானை வழிபட மாதவம் செய்திருக்க வேண்டும் என கூறுகிறார். இரண்டாம் மண்டலம், திருவலங்கல் திரட்டு, முதற்கண்டம், 51. திருத்தணிகைமலைப் பதிகப் பாடல் தோறும் முதுமையடைந்து பலவித நோய்களால் வருந்தும்முன்பே முருகப்பெருமானின் மலர் போன்ற திருவடிகளை வணங்க வேண்டும் என சுவாமிகள் அறிவுறுத்துகின்றார்.

**பாம்பன் சுவாமிகள் போற்றும் முருகப் பெருமானின் ஆறுபடை வீடுகள்** என்ற இந்நூல் சுவாமிகளின் குருபூசையன்று (16.5.2017) வெளிவர உள்ளது. ஐயா அவர்களின் பெற்றோர் பாம்பன் சுவாமிகளிடமும், கிருபானந்த வாரியாரிடமும் மிகுந்த பக்தியுடையவர்கள். தாயார் பக்திப் பாடல்கள் பலவற்றை நித்திய பாராயணமாகக் கொண்டு வழிபட்டுவந்த பக்த சிரோன்மணியாவார், ஐயாவின் பெற்றோர் பல திருத்தலங்களிலுள்ள கோயில்கட்கு வைப்புநிதி நல்கி அதில் வரும் வருமானம் மூலம் அடியார்கட்குப் பிரசாதம் வழங்க ஏற்பாடு செய்துள்ளார்கள். ஏழைமக்கள், அடியார்கள் துறவிகள் ஆகியோருக்கு அன்புடன் அன்னம் வழங்கி உபசரிக்கும் புண்ணிய சீலர்கள், குடும்பத்தினர் மயிலம் சுப்பிரமணியசாமி திருக்கோயில் பங்குனி உத்திர விழாவில் பல வருடங்களாக அடியார்கட்கு அன்னம் பாலிக்கும் பேறு பெற்றவர்கள்.

திரு. சதாநந்தன் ஐயா பெற்றோர் நடராசன்–கனகாம்புஜம் பெயரில் அறக்கட்டளை அமைத்து அதன் சார்பாக 43 ஆண்டுகளாகப் பங்குனி உத்திர விழாவைச் சிறப்பாக சென்னை திருவான்மியூரிலுள்ள பாம்பன் சுவாமிகள் சமாதி நிலையத்தில் நடத்தி சுவாமிகளின் நூல்களைப் பதிப்பித்து

இலவசமாக வெளியிட்டு வருகிறார்கள். இதுவரை அவர்கள் வெளியிட்டுள்ள நூல்கள் 26 ஆகும். அவர்கள் ஆற்றிவரும் சிவபுண்ணியச் செயல்கள் பலராலும் பெரிதும் பாராட்டுதற்குரியது. அவர்களின் குடும்பத்தினர்கள் அனைவரும் திருவருளால் எல்லா நலன்களையும் பெற்று நீடுழி சிறப்புடன் வாழ அங்கயற்கண்ணி உடனாய ஆலவாய்ச் சொக்கலிங்கப் பெருமானை இறைஞ்சி வாழ்த்தி அடியேனின் இதயம் கனிந்த நன்றியைத் தெரிவிக்கிறேன்.

மஹாதேஜோ மண்டல சபையினருக்கும், நடராசன்–கனகாம்புஜம் அறக்கட்டளை உறுப்பினர்கள் அனைவருக்கும் அடியேனின் உளங்கனிந்த நன்றி, நூலை வெளியிடும் **மயிலம் ஆதீனத்தின்** பொன்னார்ந்த திருவடிகளில் அடியேனின் வணக்கத்தையும், நன்றியையும் சமர்ப்பிக்கின்றேன். அடியேன் மேலும் பல நூல்களை வெளியிட அவர்களின் ஆசியை வேண்டுகிறேன்.

மிகக் குறுகிய காலத்தில் நூலைச் செவ்வனே அச்சிட்டு உதவிய சென்னை எஸ். எஸ். கிராபிக்ஸ் அச்சகத்தாருக்கும் நன்றி.

அடியேன் மேலும் பல நூல்கள் எழுதி வெளியிட சிவம் பெருக்கும் திருத் தொண்டு ஆற்றிவரும் சைவ ஆதீனங்களின் குருமகா சந்நிதானங்களின் ஆசிர்வாதங்களை வேண்டிப் பணிந்து வணங்குகின்றேன்.

அடியேன் நூல் எழுத உற்றதுணையாய் உதவுகின்ற கணவர் சித்தாந்தத் தொண்டர் மாமணி **டாக்டர் செ.ஈ. சூரியமூர்த்தி** Ph.D(U.S.A) மேனாள் பேராசிரியர், மதுரை காமராசர் பல்கலைக் கழகம் அவர்கட்கு என்றும் நன்றி உடையேன்.

சைவநெறி வழி வாழ்ந்து அடியேனின் உள்ளத்தில் இளம் வயதிலேயே சைவசமயஉணர்வை ஊன்றி வளர்த்து ஆளாக்கி அமரர்களாகிவிட்ட பிறந்த வீட்டுப் பெற்றோரையும், புகுந்த வீட்டுப் பெற்றோரையும் நினைவு கூர்ந்து வணங்குகின்றேன்.

**கோமதி சூரியமூர்த்தி**
ஈசுவரகம்,
391, இந்திரா காந்தி தெரு,
ஆழ்வார் நகர், நாகமலை, மதுரை – 625019
தொலைபேசி : 0452 – 2458318.

## பாம்பன் சுவாமிகள் போற்றும் முருகப் பெருமானின் ஆறுபடை வீடுகள்

**“ பெற்றவரும் மறப்பார் பிறந்தார் மகரும் மறப்பார்
உற்றவளும் மறப்பார் ஒரு காலமும் நீமறவாய்
அற்றம் அறுத்து அருள்வோர் உன்னை அன்றி எவர் உளரே
தெற்று என ஆட்படுவார்க்கு அருள் சிந்து புரத்தானே”**

(திருச்சிந்துபுரம், செ.8)

பாம்பன் சுவாமிகள் முருகப் பெருமானையே ஒப்பற்ற பரம் பொருளாக வழிபட்டவர்கள், சுவாமிகள் முருகப்பெருமானின் திருவுருவக்காட்சி காணும் பேறு பெற்றவர்கள். முருகப் பெருமான் அருளால் உவமையிலாக் கலை ஞானமும், உணர்வரிய மெய்ஞ்ஞானமும் பெற்றவர்கள். முருகப் பெருமான் மீது பக்தியுடன் 6666 பாடல்களை அருளிச்செய்தவர்கள். அவை ஆறு மண்டலங்களாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

சுவாமிகள் போற்றும் ஆறுபடை வீடுகள் பற்றிய செய்திகள் இந்நூலில் தொகுத்துத் தரப்படுகின்றன. படைவீடு என்பது ஒரு அரசன் தன்னுடைய படைகளுடன் தங்கியிருக்கும் இடம் ஆகும். திருச்செந்தூரில் முருகப் பெருமான் தன் படைகளுடன் சென்று தங்கியிருந்தார். அஃது அவருக்கு ஒரு படைவீடு. வீரம் செறிந்த முருகப்பெருமான் எழுந்தருளியிருக்கும் மற்ற இடங்களையும் படைவீடுகள் என்று சொல்லும் வழக்கம் பிற்காலத்தில் ஏற்பட்டுவிட்டது.

முதல் மண்டலத்தில் சுவாமிகள் தாம் பாடிய முதல் பதிகமான அமரர்கோவை அடுத்து, ஆறுபடை வீடுகள் வரிசையில் திருப்பரங்கிரி, திருச்செந்தில், திருப்பழநிமலை, திருவேரகம், திருக்குன்று தோறாடல், திருச்சோலைமலை, திருத்தணிகைப் பதிகங்கள் பாடியுள்ளார்கள்.“

## திருப்பரங்கிரி

முதற்கண் சுவாமிகள் கூறும் திருப்பரங்கிரி பற்றிய செய்திகளைக் காண்போம். சங்க இலக்கியங்களில் மிகப் பழமையானது பரிபாடல். அதில் இப்போது காணப்படுகின்ற பாடல்கள் 22. அவற்றுள் முருகனுடைய பிறப்பு வரலாறும், வெற்றியும், வழிபடுமுறையும், படைவீடுகளில் முதன்மையான திருப்பரங்குன்றத்தின் சிறப்பும், பிறவும் பேசப்படுகின்றன. சங்க

இலக்கியங்களில் நக்கீரர் அருளிய திருமுறைகாற்றுப்படை என்ற நூல் சைவத்திருமுறைகளில் பதினொன்றாம் திருமுறையில் தொகுக்கப் பட்டுள்ளது. அந்நூல் முருகப் பெருமான் வீற்றிருக்கும் குன்றுகளைக் குறிப்பிடுகின்றது. முருகப் பெருமானின் ஆறுமுகங்கள், பன்னிருகரங்கள் பற்றி விரிவாக எடுத்துரைக்கின்றது.

பாண்டிய நாட்டின் தலைநகரமாக விளங்கிய மதுரைக்குத் தென்மேற்கே 5 மைல் தூரத்தில் திருப்பரங்குன்றம் அமைந்துள்ளது. **சுவாமிகள் அருளிய முதல் மண்டல தொகுப்பிலுள்ள பாடல்களில் 2 ஆம் பதிகம் திருப்பரங்கிரி பற்றியது.** இது 10 பாடல்கள் கொண்டது. **இரண்டாம் மண்டலம், திருவலங்கல் திரட்டு, முதற்கண்டத்தில் எட்டாம்பதிகம் திருப்பரங்கிரிப் பதிகம்: 10 பாடல்கள் கொண்டது. ஆறாம் மண்டலம், ஸ்ரீமத் குமாரசுவாமியம், திருவிளையாடல் காண்டம், 12 ஆம் பதிகம் திருப்பரங்கிரித் திருவிளையாடல் ஆகும்.** மூன்று பத்துகள். 30 பாடல்கள் கொண்டவை.

முதல் மண்டலத்தின் இரண்டாம் பதிகமான திருப்பரங்கிரி பாடல் இறுதி தோறும்

“**சிறைப்புள் மலி கா அடர் திருப்பரங்கிரி மேவு**
**சேயே சிவானந்தமே** ” என்று முடிகின்றது.

தோகை மயில்கள் மிகுந்த சோலைகள் அடர்ந்ததலம் திருப்பரங்கிரி மலையாகும். சேயே என்பது இளமை, குமரன், குழந்தை, மகன் எனப் பொருள்படும். முருகப் பெருமான் சிவானந்தமே வடிவானவன்.

முருகப் பெருமான் முதல் , இடை, இறுதி என்னும் காலத்தைக் கடந்தவன். சத்துவம், இராசதம், தாமதம் என்னும் முக்குணங்கள் அற்றவன். அவன் நீதியாகவும், நிறைகருணை ஊறும் இன்பக் கடலாகவும், அருவமான சிவமாக உள்ள பரதெய்வம். அவனுடைய திருப்பெயரான மந்திரத்தை ஒரு முறை ஓதினாலும் நினைத்த எப்பொருளும் கைகூடும் என்று சுவாமிகள் திருப்பரங்கிரி முருகனைப் போற்றுகின்றார் (1.2. திருப்பரங்கிரி, செ.1).

உன்னுடைய திருப்பெயரை நாள்தோறும் நான் ஓதியும் என் மனக்கவலை தீரவில்லை. இதனை இப்பிறவியின் பயன் என்று அறிவனோ ? எதனை யான் நினைப்பேன் ? கூறுவாயாக என்று சுவாமிகள் முருகப்பெருமானிடம் விண்ணப்பிக்கின்றார் (1.2. திருப்பங்கிரி, செ.1).

ஆணவமலத்தில் அழுந்தியுள்ள உயிர்களை எப்போதும் தன்னிடத்தில் ஐக்கியம் கொள்வதற்கு அருந் தொழில்களான படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐந்தனையும் நன்கு செய்யும் ஐந்து முகச் சிவன் என்று சுவாமிகள் முருகப் பெருமானைப் போற்றுகின்றார்

**"ஆணவ மலத்தினில் அமிழ்த்திய பசுக்களை**
**அனாரதம் தன் அகத்தே**
**ஐக்கியம் கோடற்கு அரும் தொழில்கள் ஐந்தும்நனி**
**ஆற்றும் ஐம்முகனாகி நீ"**

(1.2. திருப்பரங்கிரி, செ.2) என்றகின்றார்.

முருகப்பெருமான் அருளிய ஆகமத்தில் உள்ளபடி நிலைபெற்ற சீவகாருண்யம் வருமாயின் அளவில்லாத இறைபக்தி உண்டாகும். அதன்மேல் பாசவைராக்கியம் உண்டாகும். மேலான மெய்ஞ்ஞானமானது கண்எதிரில் உண்டாகும் என்று சேய்மை உடைய சேய்மை நாட்டவர்களும், மோனர்களும், மேதாவிகளும் சென்ற வழியை அடியேனுக்கும் அளித்தருள்வாயாக என்று,

**"நீ மாண்உடன் நவின்ற நல் ஆகமத்து உள்ளபடி**
**வளர் சீவகாருண்யம்**
**வந்திடின் அடங்கா ஈச்சுவர பத்திதான்**
**மருவும் அதன் மேல் மந்தர்கள்**
**காணரிய பாச வைராக்கியம் உண்டாம் அஙன்**
**ககனம் ஒரு புவனம் எங்கும்**
**கரையின்றி நிறைவான பரம மெய்ஞ்ஞானம் அது**
**கண் எதிர் உதிக்கும் என்று**
**சேன் உடைய சேண்நாடர் மோன மேதாவியோர்**
**சென்ற நெறி எற்கும் அளியாய்"**

(1.2. திருப்பரங்கிரி, செ.2)

என்று சுவாமிகள் வேண்டுகின்றார்.

எளியவனின் உள்ளே உள்ள மனக்குற்றங்களை ஒழித்து வினைகளைத் தேடாதிருக்கவும், உன் அழகிய திருவடிகளில் இருக்கவும், திருவருளை அளித்தருள வேண்டும் என்று சுவாமிகள் முருகப் பெருமானிடம் வேண்டுகிறார் (1.2. திருப்பரங்கிரி, செ.3).

சிவந்த குவளை மலர் மாலைகளை அணிந்த திருத்தோள்களை உடைய மூர்த்தியே என்று சுவாமிகள் முருகப்பெருமானைப் போற்றுகின்றார் ( 1.2. திருப்பரங்கிரி, செ.4). உன் செம்பொன் போன்ற திருவடியை இங்குத் திருவுளம் இரங்கி எனக்குத் தந்தருள்வாயோ ? அல்லது வஞ்சனை வலையை வீசி மோகத்தில் ஆழ்த்தும் விலைமாதர் வசம் என்னை ஒப்படைத்து விடுவாயோ ? அல்லது என்னை மெய்யடியார்களிடம் அழைத்துச் செல்வாயோ ? அல்லது ஏறவிட்டப்பின் ஏணியை எடுத்துவிடுவது போல, என்னை இடைவழியில் விட்டு விடுவாயோ ? அல்லது என் உடல் உறுப்புக்கள் எல்லாம் துன்பம் அடைந்து வீணில் அலையாதபடி அதிவிரைவில் அருள் தருவாயோ ? உயிர் வெளியில் ஓடும்வரை என்னைத் தேடி அழுது அலைவாயாக என்று வாட்டமுறச்செய்து அருள் தருவாயோ ? அறிவில் சிறியனாகிய நான் ஒரு சிறிதும் அறியேன் என்று சுவாமிகள் கூறுகின்றார் (1.2. திருப்பரங்கிரி, செ.4).

முற்கூறிய பாடலில் சுவாமிகள் "_**ஏறவிட்டு ஏணியை எடுப்பது கடுப்ப என்னை இடைவெளியில் விடுவாயோ** " என்பதிலுள்ள உவமை நயம்மிக்கது பத்துப்படிகள் உள்ள ஒரு ஏணியில் ஒருவன் ஏழு அல்லது எட்டுப்படிகள் ஏறியவுடன், ஒருவன் ஏணியை எடுத்து விட்டால் என்னாகும் ? ஏறியவன் கீழே விழுந்து அடிபடுவான். அதுபோல ஞானத்தின் படிநிலைகள் பத்தில் (தத்துவரூபம், தத்துவதரிசனம், தத்துவசுத்தி, ஆன்மரூபம், ஆன்ம தரிசனம், ஆன்ம சுத்தி, சிவரூபம், சிவ தரிசனம், சிவயோகம், சிவபோகம்), சிலபடிகள் ஏறினவனை இடையில் இறைவன் கைவிட்டால் அவன் மீண்டும் உலகவயப்பட்டு பிறப்பு இறப்பில் உழல்வான். ஏனி இடையில் நீக்கப்படாமல் இருந்தால்தான் ஏறினவன் மாடியை அடையமுடியும். பத்துபடிகளில் ஏறிப் பேரின்பம் துய்ப்பதற்கு இறைவனின் துணை இருந்தால்தான் முடியும்.

"அறிவுக் கடலே ! விவேக ஒளியே ! ஆவற்ற கருணை ஆகாசமே ! நல்லோர்களைக் காத்தருள்பவனே" என்று சுவாமிகள் முருகப் பெருமானைப் போற்றுகின்றார் (1.2 திருப்பரங்கிரி, செ.5) "விலை மாதர்களின் இன்பங்களை விரும்பி உழலாதவாறு என்னைக் காத்து உன் திருவடிகளில் வைத்தருள்வாயாக " என்று சுவாமிகள் முருகப்பெருமானிடம் வேண்டுகிறார் (1.2 . திருப்பரங்கிரி, செ.5).

"வினைவழியாக வருகின்ற பிறவித்துன்பம் மிகக் கொடியது. அது என் நினைவிற்கு இப்போது வருவதில்லை. இனி வரஇருக்கும் கொடிய

மரணவேதனையை நினைத்து என் மனம் பயந்து வருந்துகின்றது. உன்னையே உண்மையாக மிகவும் நம்பினேன். நினைக்கும் அடியார் பக்கமாய் எப்போதும் உள்ள உனது திருவுள்ளத்தில் என்னையும் வைத்துத் திருவருளை அடையச் செல்லும் பயணத்தில் நடத்தி விடுதலை கொடுத்தருள்வாயாக ” என்று சுவாமிகள் முருகப் பெருமானிடம் வேண்டுகின்றார் (1.2. திருப்பரங்கிரி, செ.6).

வேதங்களாலும் அறியப்படாதவன் நீ. மனம், வாக்குகள் அடங்கிய பொழுது தோன்றும் பூரணப்பொருள். மேலான மௌன மந்த்ரகுரு. பரந்த அறிவு. மலமற்றவன் என்றெல்லாம் சுவாமிகள் முருகப் பெருமானைப் போற்றுகின்றார் (1.2. திருப்பரங்கிரி, செ.7).

பராசர முனிவரின் புதல்வர்களாகிய தப்தர், அனந்தர், நந்தி, சதுர்முகர், சக்கிரபாணி, மாலி என்ற ஆறுபேருக்கும் முருகப் பெருமான் திருப்பரங்கிரியில் தட்சிணாமூர்த்தி வடிவம் தாங்கி, சைவ சித்தாந்த நற்பொருளை மௌனியாகி சொல்லாமல் சொல்லி உபதேசித்து அருளியதைச் சுவாமிகள் கூறுகின்றார் (1.2. திருப்பரங்கிரி, செ.7).

வினை காரணமாகவும் பிறவி காரியமாயும் வருவதால் அதனை அச்சில் உள்ள சக்கரம் போல் மாறி மாறிவரும் பிறவிப் பெருங்கடல் என்று சுவாமிகள் கூறகின்றார் (1.2. திருப்பரங்கிரி, செ.8).

உன் திருவடியை அடைதலே இன்பம் என்று என் மனதில் மிகுந்த இச்சையுடன் நாள்தோறும் உன்னுடன் தொடர்பு கொள்ளும் இந்த ஏழைக்கு இரங்கி இன்பம் ஈயாத நிலையை நினைத்து வருந்துகின்றேன். மேலும் பெண்களின் மோகத்திற்கு இரையாகி கையில் உள்ள பொருளை எல்லாம் இழந்து வருந்தி, இளைத்த பின் இவ்வுடம்பு நடுங்கித் துன்பத்தில் பொருந்திச் சிகிச்சைக்கு உள்ளாகுமோ என்று பதறி மனம் திடுக்கிட்டு வருந்துகிறது என்று சுவாமிகள் கூறுகின்றார் (1.2. திருப்பரங்கிரி, செ.8).

மன்மதனின் மலர் அம்புகளின் தாக்குதலால் மனம் நொந்து நைந்து மெலிகின்றது. வாயால் செருக்குடன் பேசிக் கடவுளை மறந்து திரிகின்றது. நோய்கள் பல வருத்துகின்றன. இவ்வாறு பல துன்பங்களை அனுபவிப்பதன்றி, உன் அரிய இன்பத்தை ஒரு சிறிதேனும் அனுபவித்தது உண்டோ ? இல்லையே ! நீ என்மீது திருவுளம் வைத்து அருள்வாயாக என்று சுவாமிகள் கூறுகின்றார் (1.2. திருப்பரங்கிரி, செ.9).

சுவாமிகள் உண்மையில் பற்றற்றவர். முருகப்பெருமான் மீது தீவிர பக்தியுடைவர் அவர் இவ்வாறு கூறுவதற்குக் காரணம், மனிதநேயத்தால் மக்களுடைய குற்றங்களைத் தம்மேல் ஏற்றிக்கூறி, முருகப் பெருமானின் அருளால் அக்குற்றங்களை நீக்கி உய்ய வேண்டும் என்பதை மக்கட்கு உணர்த்தி நன்னெறிப்படுத்துகின்றார்கள்.

சிவபெருமானுக்குப் பிரணவத்தின் அரிய பொருளை விளக்கியருளிய வள்ளல் எனச் சுவாமிகள் முருகப் பெருமானைப் போற்றுகின்றார். (1.2. திருப்பரங்கிரி, செ.10 ). விலைமாதர்களின் தொடர்பால் வீணாகக் காலம் கழிக்காமல், கருணைபுரியும் உன் திருவடிமலர்கள் என் மனத்துள்ளே இருக்கும்படி அளித்தருள்வாயாக என்று சுவாமிகள் முருகப் பெருமானை வேண்டுகின்றார். (1.2. திருப்பரங்கிரி, செ.10).

**இனி இரண்டாம் மண்டலம், திருவலங்கல் திரட்டு, முதற்கண்டம், எட்டாம் பதிகம் திருப்பரங்கிரி பற்றியது.** 10 பாடல்கள் கொண்டது. இப்பதிகத்தைச் சுவாமிகள் நந்தனவருடம், பங்குனி 16 இல் சோம வாரத்தன்று அருளியுள்ளார். பாடல் தோறும் " **திருப்பரங்கிரி உறை சிவனே** " என்று சுவாமிகள் போற்றுகின்றார். முருகப் பெருமானுக்கும் சிவனுக்கும் பேதமில்லை என்பதை உணர்த்தும். பாடல் இறுதி "**சுயம் பெருமாளே**" என்று முடிகின்றது. பாடல் தோறும் அறுமுகச் சிவனை "**விழுப் பொருளே என்று போற்றுகின்றார் " தேசு சேர் எழில்**"என்று முருகப் பெருமானின் அழகைப் போற்றுகின்றார் (2. திருவலங்கல் திரட்டு, முதற்கண்டம், 8. திருப்பரங்கிரி, செ.2).

" **இசை இயல் கூத்து என்று உள தமிழ் நாதா** "_ (2. திருவலங்கல் திரட்டு, முதற்கண்டம், 8. திருப்பரங்கிரி, செ.5 ) என்று சுவாமிகள் முருகப் பெருமானை முத்தமிழ் முதற்கடவுள் எனப் போற்றுகின்றார். "**என்னை ஆள்வான்** " (2. திருவலங்கல் திரட்டு, முதற்கண்டம், 8 திருப்பரங்கிரி, செ. 7) என்றும் " **உம்பர் காவலனே உமையவள் சுதனே** "_ (2. திருவலங்கல் திரட்டு, முதற்கண்டம், 8. திருப்பரங்கிரி, செ.8 ) என்று சுவாமிகள் முருகப்பெருமானைப் போற்றுகின்றார். (சுதன்- இராசகுமாரன் ( தமிழ் மொழி அகராதி ) சுவாமிகள் இப்பதிகத்தின் முதற்பாடலில் முருகப் பெருமானைச் **சரவணன்** எனக் குறிப்பிடுகின்றார். சரம்-நாணல். வணம்-காடு. நாணற்புல் நிறைந்த பொய்கையில் தோன்றியதால் சரவணன் எனப்படுவான். இறைவனின் அருளில்லாமல் தான் பாசத்தால்

பினைக்கப்பட்டிருப்பதால் உயர்ந்திலேன் அந்தோ என்று சுவாமிகள் பாடல் தோறும் கூறி வருந்துகின்றார். ஆணவத்தைப் பாம்பு என்றும் கயிறு என்றும் குறிப்பிடுகின்றார் (2. திருவலங்கல் திரட்டு, முதற்கண்டம், 8. திருப்பரங்கிரி, செ.9,10).

" **பந்தமே போக்கிப் பதவருளாக்கிப்**
**பகலிரவண விடா நிலையில்**
**சந்ததஞ் சேர்க்கத் தயவு செய்யாயோ** "
(2. திருவலங்கல் திரட்டு, முதற்கண்டம், 8. திருப்பரங்கிரி, செ. 1)

என்று சுவாமிகள் முருகப் பெருமானிடம் வேண்டுகிறார். பாடல்கள் தோறும் சுவாமிகள் முருகப் பெருமானிடம் விண்ணப்பிக்கும் வேண்டுகோள்கள் பின்வருமாறு. பொருள் வெளிப்படை.

" **பாசமே போக்கிப் பதவருளாக்கிப்**
**பரிபூரணநிலையில்**
**நேசமாய் நிலைக்கச் செய்யும் வகைபுரியாய்**
(2.1.8. திருப்பரங்கிரி, செ.2)
" **உன் அடிமையை அழைத்து உன்**
**அடித்தொழும்பாயுறும் வேலை**
**ஒன்றையே விதிப்பாய்**" (2.1.8. திருப்பரங்கிரி, செ.3)
"**ஆணவமலம் அறவே கருணைசெய்தே எனை ஆளாய்**"
**...........மாமும்மலம் அற நீ தான்** (2.1.8. திருப்பரங்கிரி, செ.4)
**வருவது கடினம் எனாதே**
**உசிதமொடு தடுத்தாள்வது கடன்காண்**"
**(2.1.8. திருப்பரங்கிரி, செ.5 )**"
**தன் கடன் அடியேனையும் தாங்குதல்** " **என்று அப்பர் பெருமான் கூறுவது இங்கு நினைவுகூரத்தக்கது.**
"**.............பழமல அகற்றிப்**
**பகரும் ஆனந்த நிலையில்**
**நிச்சயாதிக்கமா நிறுத்த வாராயே**"
**( 2.1.8. திருப்பரங்கிரி, செ.6 )**
" **தன் கடன் அடியேனையும் தாங்குதல்**" **என்று அப்பர் பெருமான் கூறுவது இங்கு நினைவுகூரத்தக்கது.**
"**..................பாச வல் ஒழித்து உன்**

**இணையடி என் முடி சூட்டி**
**நல்லங் கொளற்கு பன்னவாராயோ "**
**( 2.1.8. திருப்பரங்கிரி, செ.7 )**
**" மாயை நலிவுறத் தடுத்தாள்வாயோ"**
**(2.1.8. திருப்பரங்கிரி, செ.8)**
**"அஞ்சிடா எனவே ஆதரித்து அணைத்து உன்**
**அடித் தொழும்பாக்க வாராயோ "**
**(2.1.8. திருப்பரங்கிரி, செ.9 )**
**"கட்டும் ஆணவமாம் கயிற்றினை அறுத்து என்**
**கவலையின் திறங்கடியாயோ "**
**( 2.1.8. திருப்பரங்கிரி, செ.10 ).**

**ஆறாம் மண்டலம், ஸ்ரீமத் குமாரசுவாமியம், திருவிளையாடற் காண்டத்தில் 12வது ஆக திருப்பரங்கிரி திருவிளையாடல் என மூன்றுபத்துகள் முப்பது பாடல்கள்** சுவாமிகள் அருளியுள்ளார். முருகப் பெருமான் தெய்வயானையைத் திருமணம் செய்தது விளக்கிக் கூறப்பட்டுள்ளது. இங்குச் சுவாமிகள் முருகப் பெருமானின் பல்வேறு பெயர்களைக் குறிப்பிடுகின்றார். "**குமரன்**" (6. திருப்பரங்கிரித் திருவிளையாடல், முதல் பத்து, செ.1)

**வேலவன்** " (மேலது செ.7)
**சேயவன்** (மேலது, செ.10)

**"முருகன் குமரன் குகன் என்று மொழிந்து**
**உருகும் செயல் தந்து உணர்வு என்று அருள்வாய்"**
(கந்தரனுபூதி, 15)

என்ற அருணகிரிநாதர் வாக்கால் முருகப் பெருமானுக்கு உரிய பல பெயர்களுள் ஒன்று **குமரன்** என்று உணரப்படும். குமரன் என்ற சொல்லுக்கு மூன்று பொருட்கள் உண்டு. அவை :

1. குமரன் என்றால் குமாரன் எனப் பொருள்.
2. குமரன் என்ற சொல்லுக்கு இளமை எனப்பொருள்
3. கு-குற்சிதம் (மலம்). மாரன்-மரிக்கச் செய்பவன்.

“ குவ்வெனும் குற்சிதம் மாமலம்
கொன்று அருள் செய்பவன் மாரன் என்று
ஒவ்விடும் அர்த்தமாம் அவை
ஒன்றும் நவிற்சி குமாரன் என்று
உய்வுளோர் நாவில் எழும்பவே
உள்ளது கந்நதம் நன்னிலைப்
பவ்வம் என்னும் குமரா எனப்
பன்னுநர் பாசறை பாறுமே”
(தகாராலய ரகசியம், செ. 46)

என்ற பாடல் குமரன் என்ற சொல் உயிர்களின் மலப்பிணிப்பை அழித் தொழிக்க வல்லவன் என்ற பொருளை உணர்த்தும். ( பாசறை பாறும் – துன்பம் நீங்கும்) .

“**வேலவன்**” (முதல் பத்து, செ.7) என்பது வேலை உடையவன் என்பதால் வந்தது. வேல் ஞானசக்தியை உணர்த்தும். வெற்றியைத் தரும். சேவல் கொடி உடையவன் ( 6.1.12. திருப்பரங்கிரித் திருவிளையாடல், முதல் பத்து, செ.2 ). சூரபதுமனை முருகப் பெருமான் அடக்கிய போது அவன் மெய் கூறுபட்டு ஒரு கூறுமயிலாகவும், பிறி தொரு கூறு சேவலாகவும் மாற, மயிலை ஊர்தியாகவும், சேவலைக் கொடியாகவும் முருகப்பெருமான் கொண்டனன் என்பது வரலாறு. சேவல் கொடி நாத தத்துவத்தை உணர்த்தும். இறைவன் நாத அதீதன். உலகிலுள்ள சேவல் தன் ஒலியால், புற இருளைப் போக்கும் கதிரவன் வரவை உணர்த்தும். முருகப் பெருமானின் சேவல் கொடி மாந்தர்களின் அக இருளைப் போக்கும் ஞான சூரியனான முருகப் பெருமானின் வரவை உணர்த்தும்.

சுவாமிகள் முருகப் பெருமானை “ **சேயவன்** ” என்ற சொல்லால் குறிப்பிடுகின்றார் (6. திருப்பரங்கிரித் திருவிலையாடல், முதல் பத்து, செ.10). முருகப்பெருமான் தன் திருவடிகளை மனம், வாக்கு, காயத்தால் வழிபடுபவர்க்கு அழிவில் வீடு நல் விருத்தியும் ஈயும் என்று சுவாமிகள் போற்றுகின்றார் (6. திருப்ரங்கிரித் திருவிளையாடல், முதல் பத்து, செ.10)

சுவாமிகள் முருகப்பெருமானைச் “**செக்கர் வேள்** ”_என்று குறிப்பிடு கின்றார் (6. திருப்பரங்கிரித் திருவிளையாடல், இரண்டாம் பத்து செ.8) வேள் என்றால் விருப்பம் எனப் பொருள். முருகப் பெருமான் சிவந்த

நிறமுடையவன் ஆதலாலும் யாவராலும் விருப்பப்படுவதற்குரியவன் ஆதலாலும் செக்கர் வேள் எனப்படுகின்றான். சுவாமிகள் செக்கர்வேள் செம்மாப்பு, செக்கர்வேள் இறுமாப்பு என இருநூல்கள் அருளியுள்ளார். அவை நான்காம் மண்டலத்தில் தொகுக்கப்பட்டுள்ளன. **செக்கர்வேள் சிவஞானத்திலும், வீடு பேற்றிலும் விருப்பத்தை உண்டாக்குவான்.**

சுவாமிகள் முருகப்பெருமானைக் "**குகன்** " (6.திருப்பரங்கிரித் திருவிளையாடல், மூன்றாம் பத்து, செ.1 ) என்றும், **கந்தன்** ( மேலது. மூன்றாம் பத்து, செ.3) என்றும், சரவணன் (மேலது, மூன்றாம் பத்து, செ.10) என்றும் குறிப்பிடுகின்றார் குகன் என்னும் சொல்லுக்கு ஆன்மாக்களின் இதயக்குகையில் இருப்பவன் எனப் பொருள். ஒரு கோபுரம் புதுக்கி அதன் உச்சியில் தங்கக்கவசம் அமைப்பது போல், கந்தரனுபூதியின் முடிவில் குக என்ற மந்திரம் ஒளி செய்து கொண்டிருக்கிறது. "குகா, குகா என்போர் பிறவிக் கடலைக் கடப்பர் " பவ சாகரத்தில் அழுந்தி எழா எழா துனம் ஆறெழுத்தை நினைந்து குகா குகா எனும் வகை வாரா தோ "என்று திருப்புகழ் கூறுகின்றது. பாம்பன் சுவாமிகள் " குகனே குகனே என்று கூறுவார் நாவில் வாழ்பவன்" என்கிறார் (4. குமரவேள் பதிற்றுப் பத்தந்தாதி, செ.99).

"**கந்தன்**" என்ற சொல்லுக்குப் பகைவர்களுடைய பராக்கிரமங்களை வற்றச் செய்கின்றவன் எனப் பொருள் என்று வடமொழி நிகண்டு கூறுகின்றது. இதனை "ஸ்கந்தயதி சத்ரூன் சோஷயதீதி ஸ்கந்த" என்ற சுலோகத்தாலும் அறியலாம். கந்தன் என்ற சொல்லுக்குச் சேர்க்கப்பட்டவன் என்பது பொருள்.

**" அந்தமில்லதோர் மூவிரு வடிவம் ஒன்றாகிக்**
**கந்தன் என்று பெயர் பெற்றனன் கவுரிதன் குமரன்"**
**( கந்தபுராணம் )**
**"சேயவன் வடிவம் ஆறும் திரட்டி நீ ஒன்றாய்ச் செய்தாய்**
**ஆயதனால் கந்தன் ஆமெனும் நாமம் பெற்றான் "**
**( கந்தபுரானம் )**

என்று கந்தபுராணம் கூறுகின்றது.

**" ஆறுமோர் உருவதாக ஆக்கலின் கந்தனானான்"**

**என்று தணிகைப்புராணம் கூறுகிறது.**

“ **அன்னவள் கண்டு அவ்வுருவம் ஆறினையும்**
**தன் இரணடு கையால் எடுத்தணைத்து கந்தன் எனப் பேர் புனைந்து**”

என்று கந்தர்கலி வெண்பா ( கண்ணி 83-84 ) கூறுகின்றது. கந்து என்ற சொல்லுக்கு யானை கட்டும் தறி என்ற பொருளும் உண்டு. அது ஒரு பற்றுக் கோட்டினைக் குறிக்கும். அன்- ஆண்பால் ஒருமை விகுதி. ஆன்மாக்கட்டு உலகப்பற்றுக்களை அழிக்கும் ஒருபற்றுக்கோடாக முருகப்பெருமான் விளங்குவதால் அவன் கந்தன் என்னும் பேர் பெற்றான்.

“**எந்தக் கடவுளும் என் கோன் போழ்**
**கந்தக் கடவுளை விஞ்சாதே** ”
என்று பாம்பன் சுவாமிகள் கூறுகின்றார்.
அறுமுனிவர்க்கு முருகப் பெருமான் ஞானோபதேசம் செய்தருளினார் (6. திருப்பரங்கிரித் திருவிளையாடல் மூன்றாம் பத்து, செ.9).

## 1.3. திருச்செந்தில்

முதல் மண்டலத்தில் பாம்பன் சுவாமிகள் பாடல்களின் மூன்றாவது பதிகம் திருச்செந்தில் என்பதாகும். திருநெல்வேலியிலிருந்து சுமார் 36 மைல் தொலைவில் அமைந்துள்ளது திருச்செந்தில் எனப்படும் திருச்சீரலைவாய். இவ்வூர் ஆதியில் வடமொழியில் ஜெயந்திபுரம் எனறு அழைக்கப்பட்டு, பின்னர் செயந்தி, செந்தில், திருச்செந்தூர் என்றெல்லாம் தமிழில் பெயர்கள் பெற்றுள்ளன. திருச்செந்தூர் என்ற சொல்லுக்குப் புனிதமும், வளமும் பொருந்திய வெற்றிநகர் என்றும், செல்வமும், வெற்றியும் அருளவல்ல தலம் என்றும் பொருள் கூறுவர். மன்னார்குடாக்கடல் அலைகளால் ஓயாமல் தழுவப்பெறும் காரணத்தால் திருச்சீரலைவாய் என்றும் இத்தலம் அழைக்கப்படுகிறது. இஃது இரண்டாவது படை வீடு.

முதல் மண்டலத்தின் மூன்றாவது பதிகமான திருச்செந்தில், பாடல் தோறும் இறுதியில் “**எந்தையே கந்த சிவம்** ” என முடிகின்றது. மதில் சூழ்ந்த வீடுகள் மிகுந்தது திருச் செந்தில் (1.3. செ. 1-10).

இறப்பு நிகழ்வு எதிர்வு என்னும் முக்காலத்தில் இறவாத மெய்ப் பொருளான தலைவன் என்று சுவாமிகள் முருகப்பெருமானைப் போற்றுகின்றார் ( 1.3. திருச் செந்தில், செ.4 ).தூலக் கண்களாலும், மனத்தின் நினைப்பாலும் அறிய முடியாத பொருள் நீ எல்லையற்ற

ஆகாசமாய் எங்கும் நிறைந்துள்ளாய். அண்டத்தில் நிறைந்துள்ள நீ, நுண்ணறிவு இல்லாது சிறிறறிவு மட்டுமே உள்ள உயிர்களின் பிண்டமான உடம்பிலும் உள்ளாய், உயிர்களிடம் கொண்ட கருணையினால் திருவுருவம் கொள்வாய். நாங்கள் உன்னை உருவமாகவும் வழிபடுவோம் என்று சுவாமிகள் போற்றுகின்றார் (1.3. திருச்செந்தில், செ.6). கண்ணுக்குத் தெரிகின்ற பொருட்களிலும், தெரியாத பொருட்களிலும், எல்லையில்லா ஆகாசத்திலும் நிறைந்துள்ளாய் தேவர் முதல் எழுவகையான பிறப்புக் கூட்டத்தையும் தன்னுள் அடக்கி ஆள்கின்ற சர்வ வல்லமையுடையவன் ( 1.3. திருச்செந்தில், செ.7 ) என்று சுவாமிகள் முருகப் பெருமானைப் போற்றுகின்றார். உண்மை அன்பிற்கு அகப்படுவான் ( 1.3. திருச்செந்தில் செ.8) என்று சுவாமிகள் கூறுகின்றார்

**"அன்பின் உள்ளாகி அமரும் அரும்பொருள்**
**அன்பின் உள்ளார்க்கே அணை துணையாமே"**

(திருமந்திரம், 278)

என்று திருமூலர் கூறுவது இங்கு நினைவு கூரத்தக்கது. தேவர்கட்கெல்லாம் தேவன். அருணகிரி நாதர் புகழும் ஈசன். உபநிடதங்கள் கூறும் முனிவர்களின் தலைவன். இரவு பகல் என்னும் இரு பொழுதுகளும் இல்லாத பரவெளியில் எல்லாக் காலத்திலும் இருக்கும் பேரின்ப வெள்ளம் என்று முருகப் பெருமானைப் போற்றுகின்றார் (1.3. திருச் செந்தில், செ.10).

உலக வாழ்வு நிலையற்றது என்பதைச் சுவாமிகள் பின்வருமாறு கூறுகின்றார். உயிர் பிரிந்து பின்னர், உடம்பை உற்றாரும், உறவினர்களும், வலிய பிணப்பறை சிறப்பாக முழக்கிச் சுடு காட்டுக்கு எடுத்துச் சென்று எரியூட்டுவர். அத்தீயில் எரிந்து ஒரு பிடி சாம்பலாகும். இந்த உலக வாழ்வை அறியாமை இருள் சூழ்ந்த மனம் உடையார் பெரிதாக மதிப்பர். மதித்து, உன்னை நினைக்கமாட்டார்கள் என்கின்றார் ( 1.3. திருச்செந்தில், செ.2).

**" ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டுப்**
**பேரினை நீக்கிப் பிணம் என்று பேரிட்டுச்**
**சூரையம் காட்டிடைக் கொண்டு போய்ச்சுட்டிட்டு**
**நீரினின் மூழ்கி நினைப்பொழிந்தார்களே "**

(திருமந்திரம், முதல் தந்திரம், 2 வது யாக்கை நிலையாமை, (செ.3)

என்று திருமூலர் கூறுவது இங்கு நினைவுகூரத்தக்கது.

பாம்பன் சுவாமிகள்,

**"...................... நீ கருணையால்**
**சாத்திரம் கொடுத்து ஆசு அறுத்து அருளும் நாள் எந்நாள் சொல்லி அருளே** " (1.3. திருச்செந்தில், செ.1)

என்று முருகப் பெருமானிடம் வேண்டுகின்றார். ஆசு– குற்றம் எனப் பொருள். மற்றொரு பாடலில் சுவாமிகள் தனக்குச் சன்மார்க்க நெறியை அருள் புரிய வேண்டுகிறார் (1.3.திருச்செந்தில்,செ.3 ). தெய்வத்தன்மை யுடைய இன்பநிட்டையில் இருக்க என்னால் முடியும் என்று துணிந்து செய்து உய்ய நான் நினைத்தேன். அவ்வண்ணமே நீ அருள்புரிவாயாக என்று சுவாமிகள் முருகப் பெருமானிடம் வேண்டுகின்றார் ( 1.3. திருச்செந்தில், செ.4). முருகப் பெருமானிடம் நீ என் எதிரில் எழுந்தருளி என்னை உன் திருவடியில் வைக்க வேண்டும் என முறையிடுகின்றார் (1.3 திருச்செந்தில், செ.8). மற்றொரு பாடலில் சுவாமிகள் முருகப் பெருமானிடம் தனக்குப பிறவா நெறி தந்தருள வேண்டுகிறார் (1.3. திருச் செந்தில், செ.9).

**இரணங்டாம் மண்டலம், திருவலங்கல் திரட்டு முதல் கண்டத்தில் ஒன்பதாவது பதிகம் திருச்சீரலை வாய் என்பதாகும்.** இப்பதிகத்தைச் சுவாமிகள் நந்தன வருடம், பங்குனிமாதம் 17 ஆம் தேதி மங்கள வாரம் செவ்வாய்க்கிழமை அன்று அருளிச் செய்தார். 10 பாடல்கள் கொண்டது. பாடல் இறுதி தோறும், "**உன்னை மறக்கினும் நா சாற்றிடும் சரவணபவவே** " என்று முடிகின்றது. சுந்தரர் திருப்பாண்டிக் கொடுமுடிப் பதிகத்தில்,

" **நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லு நா நமச்சிவாயவே** " என்று கூறுவது இங்கு ஒப்பு நோக்கத் தக்கது.

சுவாமிகள்,

**" புனித குணாளா புகழ்பவர் தோழா**
**பொன்றிடா அண்டர் தம் பரனே**"

என்று (2. திருவலங்கல் திரட்டு, முதற்கண்டம், 9. திருச்சீரலை வாய், செ.1) முருகப் பெருமானைப் போற்றுகின்றார்.

**"நான்மறை முடிவின் சொல்பொருளே" "உண்ணும் வானமுதே கன்னலார் இழுதே"** (2. திருவலங்கல் திரட்டு முதற்கண்டம், 9. திருச்சீரலைவாய், செ.2 ) என்று சுவாமிகள் முருகப் பெருமானைப் போற்றுகின்றார். (கன்னல் – கரும்பு , சர்க்கரை. இழுது–நெய்).

**" நான் அடிதொழும் நறும்பரன் "** (2. திருவலங்கல் திரட்டு, முதற்கண்டம், 9. திருச்சீரலைவாய், செ.3),

**" தெருள்மணித் திரளே குருமணிப்பொருளே**
**தீவினை தீர்க்கும் எம் பரனே"**
(2. மேலது, 9. திருச்சீரலைவாய், செ.4)

**" கிளர் சிவக் கொழுந்தே தவர் மனக் கரும்பே**
**கெழுவருண் மாமணிக்குலமே**
**............ அகவிளக்கொளியே "**
**மனமயல் தீர்க்கும் எம் பரனே"**
(2. மேலது, 9. திருச்சீரலைவாய், செ.5)

**" ........ வியன்வெளிக் கூத்தா**
**சங்கரா பண்டை மாதேவா "**
**" சுந்தரா தொண்டனேன் பரனே"**
(2. மேலது, 9. திருச்சீரலைவாய், செ.6)
**சங்கரா – இன்பம் தருபவன் )**

**" இதமரைக் கமலாசனத்து உறைகுமரா "**
(2. மேலது,9. திருச்சீரலைவாய், செ.9)

**"பவமழிப்பவனே சிவம் அளிப்பவனே"**

**" நவ மொழிப் புகழ்ப்பாச் சொலினவர்க்கு இறையே**
**நச்சினார்க்கு இனிய எம் பரனே "**
(2. மேலது, 9. திருச்சீரலைவாய், செ.10)

என்றெல்லாம் சுவாமிகள் முருகப்பெருமானைப் போற்றுகின்றார் (பவமழிப்பவன் – பிறவியை நீக்குபவன். சிவன் அளிப்பவன் உயிர்களைச் சிவமாந்தன்மை பெறச் செய்பவன்).

**இரண்டாம் மண்டலம் திருவலங்கல் திரட்டு முதற்கண்டம், 25 வது பதிகம் திருச்சிந்துபுரம்** ஆகும். 10 பாடல்கள் கொண்டது. இப்பதிகத்தைச் சுவாமிகள் மன்மத வருடம், ஆவணிமாதம், 9 ம் தேதி, மந்தவாரம் ( சனிக் கிழமை ) அன்று அருளிச் செய்தார். சிந்துபுரம் என்பது திருச்சீரலைவாய்

எனப்படும் திருச்செந்தூரைக் குறிக்கும். பாடல் தோறும் " **எனக்கு அருள்வோர் உன்னையன்றி எவர் உளரே சிந்துபுரத்தானே**" என அமைந்துள்ளது. (2. மேலது, 25. திருச்சிந்துபுரம், செ.1-10).

ஆசைகொள் பொய்யுலகைப் பற்றவிடாது செய்தோய் (2. மேலது, 25. திருச்சிந்துபுரம், செ.5) " இந்த உடம்பெடுத்தே இவண் ஏற்ற பொல்லாங்கு அனைத்தும் வந்த புலம் தெரியாது அறமாய்த்தவன் " (2 மேலது 25. திருச்சிந்துபுரம், செ.6 ). புன் தொழில் அத்தனையும் என் மனதில் படியாதிருக்கச் செய்தவன் (2. மேலது. 25. திருச்சிந்துபுரம், செ.7).

**"பெற்றவரும் மறப்பார் பிறந்தார் மகரும் மறப்பார்**
**உற்றவளும் மறப்பார் ஒரு காலமும் நீ மறவாய் "**

(2. மேலது, 25. திருச்சிந்துபுரம், செ.8)

என்று சுவாமிகள் முருகப் பெருமானைப் போற்றுகின்றார்.

**ஆறாம் மண்டலம், ஸ்ரீமத் குமார சுவாமியம், என்ற நூலில் முதலிலுள்ள திருவிளையாடற் காண்டத்தில், பதினொன்றாவது பதிகம் திருச்சீரலை வாய்த் திருவிளையாடல் என்பதாகும்.**

## 1.7. திருப்பழநிமலை

**முதல் மண்டலத்தில் நான்காம் பதிகம் திருப்பழநிமலை.** திண்டுக் கல்லிருந்து கோயமபுத்தூர் செல்லும் ரயில் பாதையில் சுமார் 35 மைல் தூரத்தில் திருவாவினன்குடி உள்ளது. ( இது மலை அடிவாரத்தில் உள்ளது. மலைமேல் உள்ளது. பழனிமலை. சிவபெருமான் முருகப் பெருமானை நோக்கி "ஞானப்பழம் நீ "என்றதால் பழநி எனப்பட்டது என்பர்)

**திருப்பழநி மலைப் பதிகம் பாடல் இறுதி தோறும் " உலகு அனைத்தும் புகழ் திருப்பழநிமலை மேவும் ஓங்கார குருநாதனே "** என்று முடிகின்றது. முருகப் பெருமானின் திருமுடி கடல் சூழ்ந்துள்ள மண்ணுலகம் முழுவதும் ஒளியைப் பரப்பும் சூரியனைப் போன்றது. ஓர் அரை நாழிகைக்குள் அசுரர்களுடைய உயிர்களை அழிக்க வல்ல கூர்மையான வேற்படையை உடையவன். ஊழியின் இறுதிக் காலத்தில் மயில் மீது ஏறி வருகின்ற முதல்வன் என்று சுவாமிகள் முருகப் பெருமானைப் போற்றுகின்றார் (1.4. திருப்பழநிமலை செ.1 ). மயில் ஓங்காரமான பிரணவத்தை உணர்த்தும் மயில் தோகையை விரித்து நிற்க்கும் போது அது வட்ட வடிவமாகவும் அதன் உடல் நீள வடிவமாகவும் காட்சி தரும். வட்ட வடிவ விந்து எனப்படும். நீள

வடிவு நாதம் எனப்படும். விந்துவும் நாதமும் சேர்ந்தால் தான் ஓங்காரம். அதனால் மயிலைப் பிரணவ மந்திரமாகச் சொல்வது மரபு. பிரணவ மந்திரத்தோடு கூடிய ஞானவேலை உருவேற்றினால் முருகன் அருள் கிட்டும் என்ற கருத்திலேயே "வேலும் மயிலும் துணை " என்று கூறி வழிபடுவர் மயிலிலுள்ள ஐந்து வர்ணங்களும் ஐந்து சுத்த தத்துவத்தை உணர்த்தும் என்று கூறுவதுண்டு.

"என் இரு கண்களே ! கண்களின் கருவிழியே ! கருணைவடிவே ! வேத வேதாந்தமே! முக்திச் செல்வத்திற்கு அரசனே! உலகம் முழுவதும் பரவியுள்ள நிறைவான பொருளே" என்று சுவாமிகள் முருகப் பெருமானைப் போற்றுகின்றார் (1.4. திருப்பழநிமலை, செ.2). ஒப்ற்ற பிரமப் பொருள் (1.4. திருப்பழனிமலை, செ.3 ). உயிரின் அறிவுக்கு அறிவாக விளங்குபவன். நரபதி, சுரபதிக் கெல்லாம் மேலான பதி (1.4 திருப்பழநிமலை, செ.5 ) எனறும் "சொல்லற்கரிய வேதத்தின் முதற் பொருளே " ( 1.4 திருப்பழநி மலை, செ.8 ) என்றும் சுவாமிகள் முருகப் பெருமானைப் போற்றுகின்றார்

சுவாமிகள் பல பாடல்களில் முருகப் பெருமானின் அருட்செயல்களைப் போற்றுகின்றார். பிரமன் ஆணவம் நீங்கித் தூய்மை அடைந்த பின்பு அவனுக்குரிய படைப்புத் தொழிலை அருளியவன் (1.4 திருப்பழநி மலை, செ.3.)

அடியார்களின் துன்பங்களை ஒழிக்கும் வள்ளல். சிவனுக்குப் பிரணவப் பொருளை உபதேசித்த குரு (மேலது, செ.4 ). கருப்பைக்குள் இருக்கின்ற உயிர்க்கும் உணவு கொடுத்தும், கல்லுக்குள் வாழும் தேரைக்கும், முட்டைக்குள் இருக்கும் கருவிற்கும் உணவு கொடுத்துக் காத்தருள்வான் (மேலது, செ.7) என்று சுவாமிகள் முருகப்பெருமானின் அருட் செயல்களைப் போற்றுகின்றார்.

"என்னுடைய துன்பம் ஒழிய என்று வந்தருள்வாய்" (1.4. திருப்பழநிமலை, செ.1 ) உன்னுடைய கடைக்கண் பார்வை என் பக்கம் திரும்புமானால் துன்பம் நீங்கும். இன்பம் சேரும் (மேலது, செ.3 ). பேயைக் காட்டிலும் இழிந்தவன் என்றாலும் உன்னை நம்புகின்ற அடியேனைத் துன்பத்தில் நிலைபெறச் செய்தல் நீதியாகுமோ ? (மேலது, செ.5). இநத மண்ணுலகில் பிறந்த நாள் முதல் செய்துள்ள தீவினைகள் பெரிய மலைபோல் இருந்தாலும் வானத்திலுள்ள சூரியன் முன் பனிக்கூட்டம் கணத்தில்

அழிவது போல, நீ நேரில் காட்சியளித்து மெய்ப்பொருளை உரைத்து உன்னை அடையுமாறு உன் திருவுள்ளம் கொள்ளமாட்டாயோ ( மேலது, செ.6 ). விலைமாதர்களின் உறவை உழித்துக் கடவுளான உன்னையே நினைக்கின்ற மனம் என்னிடத்தில் ஓங்க அருள்வாயாக (மேலது, செ.8) என்று சுவாமிகள் முருகப் பெருமானிடம் வேண்டுகிறார்.

**இரண்டாம் மண்டலம், திருவலங்கல் திரட்டு முதற்கண்டத்தில் 13, 14 வது பதிகங்கள் திருப்பழநி. 15 வது பதிகம் திருவாவினன்குடி** திருப்பழநி என்னும் 13 வது பதிகம் பாடல் இறுதி தோறும் "**தென் பழநித் திருக்கோயில் உள்ளாயே**" என்று முடிகிறது ன் (2.1.13 திருப்பழநி, செ.1.-10 ). வேறு தெய்வம் எதையும் துதித்துப் பாடாமல் முருகப்பெருமானின் திருவடியையே போற்றிப் பாடியவர் சுவாமிகள் " **சூடேன் நின் அன்றித் துதித்து நான் எதையும் பாடேன் எம்மானே**" (2. திருவலங்கல் திரட்டு, முதற்கண்டம், 13. திருப்பழநி, செ.5). பாடல் தோறும் **என்னை வா என்றே அழையாய்** ( 2. மேலது, 13. திருப்பழநி, செ.1-10 ) என்று சுவாமிகள் முருகப்பெருமானை வேண்டுகின்றார்." சாதிகுலம் பாராமல் எல்லா ஊனார் சீவனை எல்லாம் அருளுயிரென்றே மதிக்கும் வானோர் தேசிகன்" (2. மேலது, 13. திருப்பழநி, செ.8) என்றும் திருநீறணிந்து கையில் தண்டம் ஒன்றுடைய கர்த்தாவாய் எல்லோருக்கும் பரகதி நல்குவன் (2. மேலது, 13. திருப்பழநி. செ.9) என்றும் மண்ணார் சீவன் எல்லாம் இனி மாண்டெழா வகை பண்ணா நிற்கும் அருட்பரமே (. மேலது ) 13. திருப்பழநி, செ.10 ) என்றும் சுவாமிகள் முருகப் பெருமானைப் போற்றுகின்றார்.

2 ஆம் மண்டலம் திருவலங்கல் திரட்டு முதல்கண்டம் 14 வது பதிகமான திருப்பழநி, பாடல் இறுதிதோறும் "**பழநிப் பதிமேவும் பவுடியதண் சரவணத்தம் பரசமய எம்மானே**" (2. திருவலங்கல் திரட்டு, முதற்கண்டம், 14.திருப்பழநி செ.1-10) என்று முடிகின்றது. சுவாமிகள் முருகப்பெரு மானிடம் தன்னை அடிமை கொள்ளுமாறு வேண்டுகிறார் ( 2. மேலது, 14. திருப்பழநி, செ.3,4,6,7). சுவாமிகள் முருகனை வழிபட்ட பல முனிவர்களின் பெயர்களைக் கூறி தானும் அவன் திருவடிகளை வணங்குவதைக் கூறுகின்றார் அத்திரி, கௌசிகன், அகத்தியன், காசிபன், மார்கண்டன், ஆங்கிரச முனி, சமதக்கினி, புலத்திய மாமுனி, வசிட்டர், பரத்துவச முனி வணங்கிய உன் தாள் குரங்குகின்றேன் என்கின்றார் ( 2. மேலது, 14. திருப்பழநி, செ.6). (குரங்குதல் – வணங்குதல்).

சனகன், பிருகுமுனி, சனற்குமரமுனி, ததிமுனி, நாரதன், சத்தகுனன் முனி, பதஞ்சலி, வியாக்கிரமுனி, வியாசன், பராசரன், விரதபற்பமுனி, முதலியோர் தினமும் வந்து கண்ட உன் திருவடியை வரித்தேன் (2.மேலது,14. திருப்பழநி, செ.7 )என்கின்றார் சுவாமிகள் (வலித்தேன் –நினைத்தல்) இரண்யமாமுனி, துருவாசகர், சச்சிதானந்தன், வான்மீகி, ரோமன், கலைக்கோட்டுமாமுனி முதலியோர் நாளும் தரிசித்த நறுமணஞ்சால் உன் திருவடிகளைச் சரணாக நானும் வழிபட்டேன் என்கின்றார் சுவாமிகள் (2. மேலது, 14. திருப்பழநிமலை, செ.8). (சரண் – அடைக்கலம் புகல் – தமிழ் மொழி அகராதி. உயிர்களின் புகலிடமாக விளங்குவது இறைவனின் திருவடிகளே ஆகும்.

மற்றோர் பாடலில் சுவாமிகள் "**பிறவிக் கடலின் நடுவே தத்தளிக்கும் என்னை உன் தண்ணருள் ஓடத்தில் ஏற்றிக் கொளாய்**" (2. மேலது, 14. திருப்பழநி, செ.5) என்று முருகப் பெருமானிடம் வேண்டுகின்றார்.

## <u>2. திருவலங்கல் திரட்டு, முதற்கண்டம், 15. திருவாவினன்குடி</u>

இப்பதிகத்தைச் சுவாமிகள் நந்தன வருடம், பங்குனி மாதம் 30 ஆம் தேதி சோமவாரத்தன்று அருளிச் செய்தார். திருவாவினன்குடி என்பது பழநிமலையின் அடிவாரத் தலம்.

"அண்டர்யாவரும் அறியொணொப் பொருள்
ஆதி அந்தரந் தெரியொணப் பொருள்" " ஞான வான் பொருள் "
(2. மேலது, 15. திருவாவினன்குடி, செ.1)

இப்பதிகம் பாடல் தோறும், "என்னை ஆண்டுகொள் திருவாவினன்குடி சுரேசனை" என்று முடிகின்றது (2. மேலது, 15. திருவாவினன்குடி, செ.1–10). (சுரேசன் – ஈசானன், குமரன்).

என்று சுவாமிகள் முருகப்பெருமானைப் போற்றுகின்றார்

ஐவகைப் பாசச்சேற்றில் அழுந்தி நன்னெறி அறியாத நாயனேன் உன் திருவருள் இல்லது உய்வனே என்று முருகப்பெருமானிடம் சுவாமிகள் வினவுகின்றார் (2. மேலது, 15. திருவாவினன்குடி, செ.7).

**ஆறாம் மண்டலம், ஸ்ரீமத் குமாரசுவாமியம், 1. திருவிளையாடற் காண்டம் , 19 ஆவது பதிகம் திருப்பழநிமலைத் திருவிளையாடல்** ஆகும்.

அது எட்டுப் பத்துக்கள் கொண்டது. இதனை இரத்தாக்ஷி வருடம் ஆனிமாதம், 21 ஆம் தேதி, சுக்கிர வாரம் ( வெள்ளிக்கிழமை ) சுவாமிகள் அருளிச் செய்தார்.

இப்பதிகங்களில் சுவாமிகள் முருகப் பெருமானைப் பல பெயர்களால் அழைக்கின்றார். செக்கர்வேள் (6. 19. திருப்பழநித்திருவிளையாடல் முதற்பத்து, செ.4). (5 ஆம் பத்து, செ .9).

குகன் (6.மேலது, செ. 4 ஆம் பத்து, செ.5).
குமரகுரு (6. மேலது, செ.6,8,10).
சரவணன் (6. மேலது, செ.7 ).
முருகன் (6. மேலது, 6 ஆம் பத்து,செ.1).
செவ்வேள் (6.மேலது, 7 ஆம் பதது, செ.7).
தண்டபாணி (6. மேலது, 8 ஆம் பத்து, செ.10).

குமாரகுரு- குமரன் சிவபெருமானுக்குப் பிரணவப் பொருளை உபதேசத்தால் உண்டான பெயர். முருகன் பெயர் விளக்கம் பின் வருமாறு. முருகா என்னும் நாமம் தெய்வத்தன்மை, இளமை மணம், களிப்பு எனப் பல பொருள் தரும். முருகா என்று உள்ளம் உருகி ஓதுபவர்க்கு யாதெரரு குறையும் உண்டாகாது. இன்மை, மறுமைப் பலன்கள் எளிதில் கிடைக்கும். " **மெய்ம்மை குன்றா மொழிக்குத் துணை முருகா என்னும் நாமங்கள்**" என்று கந்தரலங்காரம் கூறுகின்றது. முருகா என்னும் நாமத்தை ஓதுபவர் செல்வம் பெறுபவர். வியாதி அடையார். துன்பம் எய்தார். பேரின்பம் துய்ப்பர் என்று,

" **முருகா என உனை ஓதும் தவத்தினர் மூதுலகில்**
**அருகாத செல்வம் அடைவார். வியாதி அடைந்து நையார்**
**ஒருகாலமும் துன்பம் எய்தார் பரகதியுற்றிடுவார்**
**பொருகாலன் நாடு புகார் சமராபுரிப் புண்ணியனே**"

என்று சிதம்பர சுவாமிகள் கூறுகின்றார். முருகா என்ற நாமம் தமிழில் உள்ள மெல்லினம்,இடையினம், வல்லினம் என்ற மூன்றும் உள்ள பெருமை உடையது. தண்டாயுதம் ஏந்தியுள்ளதால் தண்டபாணி எனப்பெயர் பெற்றான். தண்டபாணியை ஈசன் "**பழம் நீ**" என்றதால் பழநிமலை என தலம் பெயர் பெற்றதாகச் சுவாமிகள் கூறுகின்றார் (6.19. பழநிமலைத் திருவிளையாடல் , எட்டாம் பத்து, செ.10).

**இடும்பனுக்கு அருளிய திருவிளையாடல்.** அகத்தியர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க இடும்பன் என்பவன் திருக்கேதாரத்திற்கு அருகிலுள்ள சக்திசிகரம், சிவசிகரம் என்ற இருமலைகளைக் தூக்கிக் கொண்டு பொதிகை மலைக்குச் செல்லும் வழியில் பழநியை அடைந்து இளைப்பாறும் பொருட்டு அம்மலைகளைக் கீழே வைத்தான். பின் மீண்டும் தூக்க முயற்ச்சித்தபோது மலை எழாமை கண்டு சினத்துடன் சிவகிரியின் உச்சியை நோக்க, அங்கே ஆயிரம் சூரியப் பிரகாசத்துடன் குமரக்கடவுள் நின்று கொண்டிருப்பதைக் கண்டான். இம்மலையை விட்டு இறங்கு என்று இடும்பன் கூறினான். முருகன் மறுக்க, அசுரன் சினந்து குராமர வடிவுடன் முருகன் மேல் பாய்ந்தான். முருகனின் சுடர்வேல் அவனைக் கொன்றது. இடும்பி முருகனிடம் மாங்கல்யப் பிச்சை கேட்க, முருகன் அருளால் இடும்பன் உயிர் பெற்றெழுந்து முருகனுக்கு அடிமையானான்.

"ஆதியும் அந்தமும் நள்ளுமில் பொருள் என்று அறைந்திடும் தொன்மறை" (6.19. திருப்பழநிமலைத் திருவிளையாடல், எட்டாம் பத்து, செ.5) என்று சுவாமிகள் முருகப் பெருமானைப் போற்றுகின்றார்.

## 1.5 திருவேரகம் ( சுவாமிமலை )

தஞ்சாவூர் ஜில்லாவில் கும்பகோணத்திற்கு மேற்கே சுமார் 5 மைல் தொலைவிலும், சுவாமிமலை ரயில் நிலையத்திலிருந்து வடக்கே சுமார் ஒரு மைல் தூரத்தில் இத்தலம் அமைந்துள்ளது.

முதல் மண்டலம் ஐந்தாம் பதிகமான திருவேரகம் பாடல் இறுதிதோறும் "வீரம் உள்ள தேவர் தவமே உறுவர் தொழுது திரு ஏரகம் அமர்ந்தவேளே" என்று முடிகின்றது (1.5. திருவேரகம், செ. 10).

உயிர்கள் மீது கொண்ட கருணையால் முருகப் பெருமான் கொண்ட வடிவத்தைச் சுவாமிகள் விளக்கிக் கூறுகின்றார். ஆகமம் கூறும் சிவசாதாக்கியமும் முதல் சதாசிவமும் ஈசான முகமாகவும், அமூர்த்தி சாதாக்கியமும் ஈசனும் சத்தியோசாத முகமாகவும், மூர்த்தி சாதாக்கியமும் பிரமீசனும் வாம முகமாகவும், கர்த்திரு சாதாக்கியமும் ஈசரனும் அகோரமுகமாகவும், கன்ம சதாக்கியமும் ஈசான விசையனும் தற்புருட முகமாகவும், மாசாதாக்கியமும் அதன் மூர்த்தியும் அதோமுகமாகவும் தோன்றியவன் (1.5. திருவோரகம், செ.2). என்கிறார்.

ஞானமுடைய பக்தர்களின் தலைவன். எந்த உயிரும் எம்முடைய உயிரினுள் உள்ளன என்னும் உண்மையை எல்லோரும் அறியும்படி விசயன் கையில் அடியாலும், அரிமர்த்தன பாண்டியன் பிடித்த பிரம்படியாலும் அறியச் செய்த மகாதேவனான பெரியோன் (1.5. திருவேரகம், செ.4 ). தனக்கு ஓர் நிகர் இல்லாத இன்ப அன்பு. பரமன். சாமவேதத்தில் சுப்பிரமணியோம் எனக் கூறப்படும் மெய்ம்மொழிக்கு உரிய பொருள் (1.5. திருவேரகம், செ.6).

சுப்பிரமணியன் – நல்ல வேதத்திற்கு தலைவன். ஆனந்த மயமான பரவஸ்துவிலிருந்து தோன்றி ஒளிர்பவன் எனப் பொருள். "சு" என்னும் சொல்லின் பொருள் ஆனந்தம். ப்ரஹ்மம் (பிரமம்) என்பதன் பொருள் கட்புலனாகாத இணையற்ற சிதாகாசம் ஆகும். அனுபூதியில் அந்தப் பிரமத்திலிருந்து வெளிப்படுகின்ற ஒளியே "ணியம்" என்பதன் பொருளாகும் (தகராலய ரகசியம், செ.43) என்று சுவாமிகள் கூறுகின்றார். சதசத்து என்னும் அறிவுப்பொருளுடன் (ஆன்மா) அத்துவிதமாய் நிலைபெறும் பூரணம். முக்தி தரும் முத்தன். முத்தொழில்களின் தலைவன் (1.5. திருவேரகம், செ.9 ) என்று சுவாமிகள் முருகப்பெருமானைப் போற்றுகின்றார்.

துன்பம் என்னும் வேர்கள் மிகுந்த ஓர் அகங்காரமரமாய் நிற்கும் என்னை உனது மெய்த்திருவடியில் வைக்க நினைந்தருள்வாயாக (1.5. திருவேரகம், செ.1) என்று சுவாமிகள் முருகப்பெருமானிடம் வேண்டுகிறார்.

**இரண்டாம் மண்டலம், திருவலங்கல் திரட்டு**
**முதற்கண்டம், 10 ஆம் பதிகம் திருவேரகம்**

இப்பதிகத்தைச் சுவாமிகள் நந்தனவருடம், பங்குனி மாதம், 18 ஆம் தேதி, புதவாரம் (புதன்) அன்று அருளிச் செய்தார். 10 பாடல்கள் கொண்டது.

பாடல் தோறும் " **ஏரகச் சுரேசனே, என்றனைப் புணர்ந்து கொள்வையே**" (2. திருவலங்கல் திரட்டு, முதற் கண்டம், 10. திருவரகம், செ.1–10) என்று முடிகின்றது. (புணர்தல் – இணைதல், கலத்தல்).

"**நஞ்சம் உண்ட கண்டனார் நயந்து தந்த செல்வன்** "
(2. மேலது, 10. திருவோரகம், செ.1)

"**மங்கை பாகனார்க்கு வேதவாக்கு மூலஞ் சொன்னவா** "
(2. மேலது, 10. திருவேரகம், செ.4)

என்று முருகப்பெருமானைச் சிவனது மகன் என்றும், சிவனுக்கே உபதேசம் செய்தவன் என்றும் சுவாமிகள் போற்றுகின்றார்.

## 1.7. திருச்சோலைமலை

பதிகப் பாடல் இறுதி தோறும்,

" **தோகை மயில் ஏறி நடமாடும் வள நீடு நல்**
**சோலை மலை மேவு குகனே**"

(1.7. திருச் சோலைமலை, செ.1.10)

என்று முடிகின்றது.

எத்தனை வகையான தூயஒளிகள் ஒன்று சேர்ந்தாலும் ஒரு சூரியன் ஆகமாட்டா போல, எவ்வளவு கடவுள்கள் இவ்வுலகில் இருப்பினும் உனக்கு அணு அளவு கூட இணையாகார் (1.7. திருச்சோலைமலை, செ.3) என்றும், " ஒழியாத ஆணவமலம் என்னும் காட்டை அருள் என்னும் நெருப்பைக் கொண்டு சுட்டு ஒழிக்கும் நெருப்பு (1.;7. திருச்சோலைமலை, செ.7,8) என்றும், சீவன் முத்தர் உள்ளத்தில் இனிக்கும் கரும்பு, மெய்யன்பர்களுடைய மனமாகிய தாமரை மலர் நடுவில் ஊறும் இன்சுவைத் தேனைப் பருகிடும் சுரும்பு (1.7. திருச்சோலைமலை, செ.9) என்றும், சுதர்சனச் சக்கரம் ஏந்திய திருமால் முதலிய தேவர்களும், சுகர், வாமதேவர், தசரத இராமன், முகுந்தச் சக்கரவர்த்தி, அருணகிரிநாதர் வணங்கிய கடவுள், மேலான தத்துவ ஒளி, தூய எண்குணப்பொருள் (1.7. திருச்சோலைமலை,செ.10)என்றும் சுவாமிகள் முருகப்பெருமானைப் போற்றுகின்றார்.

அன்போடு உனது திருக்கரத்தில் என்னை அணைத்து என் துன்பத்தை நீக்கியருள்வாயாக (1.7. திருச்சோலைமலை, செ.1) என்றும், நான் குரங்கு போல் ஒரு கிளையிலிருந்து மற்றொரு கிளைக்குக் குதித்து திரியும் மனம் உடையவன். குதிகொள்ளும் அக்குரங்கு ஒன்றை விடும் போது மற்றொன்றைப் பற்றும். அதுபோல என் இதய பீடத்தலுள்ள உன்னைப் பற்றிப் புலம்பிப் பிதற்ற மட்டும் கற்றுள்ளேன். இவன்கூட நம்மை நினைக்கின்ற பிராணிதான் என்று முடிவு செய்து, நீ அருள்புரிந்தால் மட்டும் உய்யும் வழி உண்டாகும். உன் கிருபை யாதோ (1.7. திருச்சோலைமலை, செ.4) என்றும், உன் சிறந்த அன்பிலே சொக்கிக்கிடக்க அருள்புரிவாயாக (1.7. திருச்சோலை மலை, செ.5) என்றும் சுவாமிகள் முருகப் பெருமானிடம் வேண்டுகின்றார்.

நல்லகுணம் எனப்படும் புதிய ஆடையை உடுத்தி, உன் திருவடியை மறவாத கொள்கை என்னும் சட்டையை அணிந்து, உன் அடியார் எவர்க்கும் நான் அடிமை என்னும் அங்கவத்திரம் பூண்டு, அருளாகிய தலைப்பாகையைக் கட்டி, நல்வழியான மௌனம் என்னும் நெற்றித் திலகம் இட்டு, தூய்மை என்னும் காலணி அணிந்து, துறவறப்பேறு என்னும் தண்டத்தைக் கையில் பிடித்து, மேலூரில் அழகிய தெருக்களில் நான் சுற்றிவருவது என்றோ (1.7. திருச்சோலைமலை, செ.6) என சுவாமிகள் முருகப் பெருமானிடம் வேண்டுகின்றார்.

இடைவிடாது உன்னை நான் நினைத்து, நினைத்து அறியாமை என்னும் குருடு ஒழிந்து, உன்னைக்கண்டு துன்பமில்லாத இன்பமும் அதனைக் கடந்த நிலையான முக்தியும் எனக்குச் சொந்தமாகும்படி என்னை வந்து அடிமை கொண்டருள்வாயாக (1.7. திருச்சோலைமலை, செ.9 ) என்று சுவாமிகள் முருகப் பெருமானிடம் வேண்டுகின்றார். சிவகங்கையில் தலை முழுகி, சிதம்பரத்தில் உன் திருவடியில் அழகிய மலர்களால் அர்ச்சனை புரிந்து, சிறந்த பேரின்பம் அடையச்செய்ய அருள்புரிவது எப்போது என்று கூறியருள் வாயாக (1.7. திருச்சோலைமலை, செ.10 ) என சுவாமிகள் முருகப் பெருமானிடம் வேண்டுகிறார்.

**இரண்டாம் மண்டலம், திருவலங்கல் திரட்டு, முதற்கண்டத்தில் 12 வது பதிகம் திருச்சோலைமலை** என்பதாகும். இதனைச் சுவாமிகள் நந்தன வருடம், பங்குனி மாதம், 23 ஆம் தேதி சோமவாரம் (திங்கட் கிழமை) அன்று அருளிச் செய்தார். சுவாமிகள் தம் உடல் உறுப்புகள் தலை, செவி, விழி, மூக்கு, நா, கரம், கால், உடம்பு, மனம், நெஞ்சு முதலியன முருகப் பெருமானை வழிபட மாதவம் செய்திருக்க வேண்டும் எனக் கூறுகின்றார் (2. மேலது, 12. திருச்சோலைமலை, செ.1-10 ). "**நானேயோ தவம் செய்தேன் சிவாயநம என பெற்றேன்**" என்று மாணிக்கவாசகர் கூறுவது இங்கு நினைவு கூரத்தக்கது. திருஞானசம்பந்தர் வலஞ்சுழிவாணனை வாயார பண்ணி ஆதரித்து ஏத்தியும், பாடியும் வழிபட தன் நெஞ்சம் புண்ணியம் செய்திருக்க வேண்டும் (2:242 :1 ) என்று கூறுவதும் இங்கு நினைவு கூரத்தக்கது.

## 1.6. திருக்குன்றுதோறாடல்

முருகப்பெருமான் எழுந்தருளியுள்ள மலைகள் அனைத்தையும் குறிக்கும். மலையும், மலை சார்ந்த பகுதியும் குறிஞ்சி நிலத்தைக் குறிக்கும். அதற்குரிய ஆதிதெய்வம் முருகப் பெருமான். " **சேயோன் மேய மைவரை உலகம்**" என்று தொல்காப்பியம் கூறுகின்றது. "**குன்றுதோறாடலும் நின்றதன் பண்பே** " என நக்கீரர் கூறுகின்றார் (திருமுருகாற்றுப்படை, வரி, 217). " **குன்று தோறாடிய குமரனைப்போற்றுவோம்**" _( கந்தபுராணம் ) என்று கச்சியப்பசிவாசாரியாரும்,

"**...................உமைபால**
**பதி எங்கிலும் இருந்து விளையாடிப்**
**பல குன்றிலும் அமர்ந்த பெருமானே**"
(அதிரும் கழல் எனத் தொடங்கும் திருப்புகழ்)

என்று அருணகிரிநாதரும் குன்று தோறாடும் குமரனைப் போற்றுகின்றார்.

1.6. திருக்குன்றுதோறாடல் பதிகம் பாடல் தோறும் இறுதியில் "**குன்று தோறு ஆடல் வதி மஞ்சு ஆர் பெரும் தகையானே** " ( செ.1–10) என்று முடிகின்றது.

முக்காலத்திலும் அழிவில்லாத மெய்ப்பொருளாய் உள்ள மேலான முதல்வன் (1.6. திருக்குன்றுதோறாடல், செ.2 ). என சுவாமிகள் முருகப் பெருமானைப் போற்றுகின்றார். மேலும் இப்பாடலில் இன்பம் தரும் இறைவனுக்கு இனிய பொருட்களையே உவமையாகக் கூறி சுவாமிகள் போற்றுகின்றார்.

அடியார்க்கு எளியன். உலகப்பற்றை நீத்தவர்களின் மனத்தில் குடிகொண்டிருப்பவன் (1.6. திருக்குன்று தோறாடல், செ.3 ) என்றும், மழு, மான், புலித்தோல், யானைத் தோல், பிறைநிலவு, கங்கை, பாம்பு ஆகியவற்றைத் தரித்ததையும், திரிபுரம் எரித்ததையும், பிரமனும், திருமாலும் தேடியும் அறிதற்கு அரிய பேரொளியாய் நின்றதையும் (1.6. திருக்குன்று தோறாடல், செ. 6) சுவாமிகள் போற்றுகின்றார்.

சிவசாயுச்சியம் என்னும் பரமுத்தியை அளித்தருள்வாயாக (1.6.திருக்குன்று தோறாடல் , செ.1) என்றும், பெருந்துன்பத்திற்கு இடமான இவ்வுலக வாழ்வை விட்டு இரு கண்களையும் மூடி மௌனமாய் வாழ்வது

எந்நாள் ? (1.6. திருக்குன்று தோறாடல், செ.2) என்றும், மௌனமுற்று நாள் தோறும் மனத்தை உன்பால் நன்றாக வைப்பதற்கு எனக்கு உன் அருளைத்தந்து என்னை அடிமை கொள்வாயாக (1.6. திருக்குன்று தோறாடல், செ.5) என்றும், என் தலைமேல் உன் இரு திருவடிமலர்களை வைத்து அன்பு நிலையில் எக்காலத்தும் நீ என்னுடைய அடிமை என்று திருவாய் மலர்ந்து அமுத மொழியைச் சொல்ல என்றைக்கு எழுந்தருள்வாயோ ? (1.6. திருக்குன்று தோறாடல், செ.8 ) என்றும் , உலகினர் இவன் பேயனோ, பைத்தியமோ, சனி பிடித்த உயிரோ, அறிவில்லாத பேதையோ என்று இகழ்ந்து பேச, எமது கடவுளாகிய உன்னை நாடி இவ்வுலக வாழ்வைத் துறந்து துறவறம் என்னும் பெருஞ் செல்வத்தில் இருக்க அருள்வாயோ (1.6. திருக்குன்றுதோறாடல், செ.10 ) என்றும் சுவாமிகள் முருகப் பெருமானிடம் வேண்டுகின்றார்.

பத்து வகையான தீக்குணங்களும் ஒழியாத மனத்தினால் விளைந்த குற்றத்தை, நல்ல அருள் நோக்கம் என்னும் மழை பொழிந்து, அதில் என்னை நனையவிட்டுக் கழுவி அன்பால் அணைத்து உன்னிடம் இருக்கச் செய்து, மெய் என்னும் பாலைப் புகட்டி, அதன் மகிமையால் அறிவு குளிர்ந்து, அழகிய குணம் உற்ற உடம்பு, அழகிய மலைபோல் உறுதியாக வைக்கும் நிலை என்று நிகழும் (1.6. திருக்குன்று தோறாடல், செ.9) என்று சுவாமிகள் முருகப்பெருமானிடம் வினவுகின்றார்.

இரண்டாம் மண்டலம், திருலங்கல் திரட்டு, முதற்கண்டம், **11. பலகிரி** என்பது குன்றுதோறாடல் ஆகும். சுவாமிகளின் இப்பதிகத்தை நந்தன வருடம் பங்குனி மாதம் 21 ஆம் தேதி மந்தவாரத்தன்று (சனிக்கிழமை ) அருளிச் செய்தார். பாடல் இறுதி தோறும்,

**"...............பலகிரி முருகா**
**இனிமைசெய் பரிவுடன் என்னையும் அடிமை கொள**
**இது நல்ல தருணமே**

(2.1.11. பலகிரி, செ.1-10) என்று முடிகின்றது.

சுவாமிகள் முருகப் பெருமானைக் "**குருபர**" (செ.3.7) **சரவணபவ, குக** (செ.3,7) **குமரகுரு** (செ.4) **அறுமுக** (செ.5) என்று பல பெயர்களால் போற்றுகின்றார் (அறுமுக - ஆறுமுகம் உடையவன்) ஏனைய பெயர் களின் விளக்கம் முன்பே கூறப்பட்டுள்ளன.

**2.1.52 . மயிலமலை** (குன்றுதோறாடலில் ஒரு குன்று) இப்பதிகத்தைச் சுவாமிகள் சார்வரி வருடம், ஆணி மாதம் 29 ஆம் தேதி, குருவாரத்தன்று (வியாழக்கிழமை) அருளிச் செய்தார். பாடல் இறுதிதோறும் "**மயில வாழ் குகனே**" என்று முடிகின்றது.

(2.1.52. மயிலமலை, செ.1-10)

" **வெண்பாவுஞ் செம்பாவும் வித்தாரப் பொன் பாவும்**
**பாண்பார் கரும்பாவு நின்பேரில் பாடிடுவேன்** "

(2.1.52. மயிலமலை, செ.8)

என்று முருகப் பெருமானிடம் தான் பாடல்களால் போற்றுவதைக் கூறுகின்றார்.

"**.....................தாள் பழிச்சு என்னை வினை**
**ஆட்டாது பேரருளால் ஆட்டி அளாவ**
**வரமாட்டாயோ** "

(2.1.52. மயிலமலை, செ.7) என்றும்

"**சிந்தை மயங்காமல் என்னைச் சித்தாந்த வீட்டிடை வை** "

(2.1.52. மயிலைமலை, செ.10)

என்றும் சுவாமிகள் முருகப் பெருமானிடம் வேண்டுகின்றார்.

## 1.12. திருத்தணிகை

முருகப் பெருமான் சூரனுடன் போர் புரிந்து, அதனால் உண்டான கோபம் தணிந்த இடம் ஆதலால் "**செருத்தணி**" எனப்பட்டு அது "**திருத்தணி** "என வழங்கப் பெறுகின்றது. இது கடல் மட்டத்திலிருந்து 700 அடி உயரத்தில் அமைந்துள்ளது. அரக் கோணத்திலிருந்து 13 கிலோ மீட்டர் தூரத்திலும், சென்னையிலிருந்து 84 கிலோமீட்டர் தூரத்திலும் உள்ளது. இதனைச் சுற்றி நான்கு திசைகளிலும் சிவத்தலங்களைக் கொண்ட பெருமையுடையது. தெற்கே காஞ்சிப்பதியும், மேற்கே சோளிங்கர் வள்ளிமலையும், வடக்கே திருப்பதியும், காளகஸ்தியும், கிழக்கே திரு ஆலங்காடும் உள்ளன. திருத்தணிகையைத் தரிசித்தால் மன அமைதியும், மகிழ்ச்சியும் உண்டாவதால் " சாந்திபுரி " என்ற பெயரும் இத்தலத்திற்கு உண்டு. இம்மலையின் சிறப்புக்களை முருகப் பெருமானே வள்ளி நாயகி அம்மையிடம் கூறும் கூற்றாக 13 செய்யுட்களில் ( கந்தபுராணம், தட்ச

காண்டம், வள்ளியம்மை திருமணப்படலம், செ. 10,297-10,306) கச்சியப்பசிவாசாரியார் விரித்துரைக்கின்றார்.

**முதல் மண்டலத்தில், 12 ஆவது பதிகமான திருத்தணிகை ஆறு பாடல்கள் மட்டும் கொண்டுள்ளது.** பாடல் இறுதி தோறும்,

“ **சுப்பிர மதர்ப்பு அவிர் திருத்தணிகை வெற்பில் உறை**
**சுப்பிரமணியப் பிரமமே** ”
(1.12. திருத்தணிகை, செ.1-6)

என்று முடிகின்றது. சுப்பிரமணியன் என்பதற்கான பெயர்க் காரணம் முன்பே இந்நூலில் கூறப்பட்டுள்ளது. திருத்தணிகை மலைமேல் எழுந்தருளியுள்ள ஒளியும், ஆனந்தமுமாக விளங்கும் சுப்பிரமணியப் பரம் பொருளே ! சத்து சித்து ஆனந்தமாக உள்ள பேரறிவு. அடியார்களைக் காத்தருளும் சஞ்சீவி மூலிகை (1.12. திருத்தணிகை. செ.1) என்றும், ஒளிகளுக்கெல்லாம் ஒளியைத் தருகின்ற ஒப்பற்ற ஒளி. அகத்தியருக்கு வளமான தமிழைக் கற்பித்தவன். வரம் அருள்பவன் (1.12. திருத்தணிகை, செ.5 ) என்றும், இன்பக் கடல் (1.12. திருத்தணிகை, செ.6 ) என்றும் சுவாமிகள் முருகப் பெருமானைப் போற்றுகின்றார். முருகனை ஆசானாகக் கொண்டு தமிழ்கற்ற அகத்தியர், அகத்தியம் என்ற தமிழ் இலக்கண நூலை அருளிச் செய்தார்.

எப்போதும் தூய்மையான உனது திருவருளில் நான் பிழைக்க ஒப்பற்ற கருணையை விரைவில் அளித்தருள்வாயாக (1.12. திருத்தணிகை, செ.1) என்றும், முருகப் பெருமானின் அன்பு தனக்கு எப்படியும் வேண்டும் (1.12. திருத்தணிகை, செ.2 ) என்றும், மன்மதன் கரும்பு என்னும் வில்லை வளைத்துத் துன்பமலர்களை என் மீது எய்வதால், கூடு போல் உடம்பு வாடி வருந்துகின்ற துன்பங்கள் ஒழியும்படி அருள்புரிவாயாக (1.12. திருத்தணிகை, செ.5 ) என்றும் சுவாமிகள் முருகப் பெருமானிடம் வேண்டுகின்றார்.

**இரண்டாம் மண்டலம், திருவலங்கல் திரட்டு, முதற்கண்டம், 51 ஆவது பதிகம் திருத்தணிகைமலை** என்பதாகும் . அப்பதிகப் பாடல் தோறும் தான் முதுமை அடைந்து பலவித நோய்களால் வருந்தும் முன்பே முருகப் பெருமானின் மலர் போன்ற திருவடிகளை வணங்குவதாகக் கூறுகின்றார் சுவாமிகள் (2. திருவலங்கல் திரட்டு, முதற்கண்டம், 51. திருத்தணிகைமலை, செ.1-10).

**"கூனி ஆடிக் கோலது ஊன்றிக் குறுகி நடந்து.......**
**கஞ்சியுண்டு படுவனம் சேர் முன்னே"** (2.51. திருத்தணிகைமலை, செ.2)

**" ஈழை கீர் கீரென்று இழுக்க இருமல் எழும் முன்னே"**
**" கண்கள் மயங்கிக் காது அடங்கிக் கருத்து மயங்கும் முன்னே"**
**" கேசம் எல்லாம் வெண்மை பூத்துக் கீழ் நடைகாண் முன்னே "**
**" மூளை குன்றி மாழை கொண்டு முழுதும் அடங்கும் முன்னே"**
**" கால் கை ஓய்ந்து கீன் முடங்கிக் கவலை அழுந்தும் முன்னே"**
**" வெள்ளையாய பல் விழுந்து விரைவு தளர்ந்திடு முன்னே"**
**"பாய் கிடந்து பவ்வீ பெய்து பையல்கள் சீ எனுமுன் "**
**" உண்ணீர் அன்னம் செல்லல் இன்றி உயிருள் அடங்கு முன்னே"**

(2. திருவலங்கல் திரட்டு, முதற்கண்டம்,
51. திருத்தணிகை மலை, முறையே செ.3,
4,5,6,7,8,9,10)

என்று சுவாமிகள் முதுமையால் உடல் நலிவுறுவதை விளக்கிக் கூறி, இளமையிலே இறைவனை வணங்க வேண்டும் என்பதை அறிவுறுத்துகின்றார். புலன் நுகர்ச்சிக்குரிய பல தன்மைகளும் குறைந்து காதுகள் கேளாமல், கண்கள் பார்வைகுன்றி, பவளம் போன்ற உடல் நிறம் குன்றி, தோல் சுருங்கி, நரைதோன்றும் மூப்புக்காலம் நம்மை வந்து அணுகுமுன் சிவ பெருமான் உறையும் கடம்பை நகர்த் தடங்கோயிலாகிய, திருத்தூங்கானை மாடத்தைத் தொழுவீர்களாக,

**"பன்னீர்தை குன்றிச் செவி கேட்பிலா**
**படர் நோக்கிற் கண் பவளந் நிற**
**நன்னீர்மை குன்றித் திரை தோலோடு**
**நரை தோன்றுங் கால நமக்காதன் முன்**
**பொன்னீர்மை துன்றப் புறந்தோன்று நற்**
**புனல் பொதிந்த புன்சடையான் உறையும்**
**தொன்னீர்க் கடந்தைத் தடங்கோயில் சேர்**
**தூங்கானை மாடந் தொழுமின்களே "** (1 : 59 : 6)

என்ற ஞானசம்பந்தர் கூறுவது முற்கூறிய சுவாமிகளின் பாடல்களின் கருத்துக்களுடன் ஒப்புநோக்கத்தக்கது.

❀ ❀ ❀ ❀ ❀